Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-21 | 07-11-2005 | திங்கட்கிழமை | ஓசை-263


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
T.P:0712-610008
(சி-13213)

# சனாதிபதியாக யார் தெரிவானாலும் தமிழினத்திற்கு விமோசனம் இல்லை

## மட்டு-அம்பாறை தமிழ்தேசிய ஒற்றுமை ஒன்றியம் அறிவிப்பு

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதியாக யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழினத்திற்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. இந்தத்தேர்தல் எமக்கு வேண்டாம் என்று மட்டக்களப்பு-அம்பாறை தமிழ்தேசிய ஒற்றுமை ஒன்றியம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இதுவரையான நான்கு சனாதிபதிகளும் தமிழ்மக்களுக்கு கொடுமைகளையே இளைத்துள்ளனர். தமிழினப் படுகொலைகளை வடக்கு கிழக்கெங்கும் நடத்தி தமிழர்களை அழித்தனர்.

பயங்கரவாதச் தடைச்சட்டம் அவசரகாலச் சட்டம் என சட்டங்களை இயற்றி திட்டம்போட்டு தமிழர் களை சித்திரவதைப்படுத்தி சிறிலங்கா சிறைக் கூடங் களில் அடைத்தனர். எமது பொருளாதார வளங்களை அழித்ததுடன் பொருளாதாரத்தடைபோட்டு எம் வாயில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மூன்று இளைஞர்கள் இராணுவப் புலனாய்வாளர்களால் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் மற்றும் களுவங்கேணிப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆயுததாரிகளால் மூன்று தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இக்கடத்தல் நடவடிக்கை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கும் இரவு 7.45 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளன.

களுவங்கேணியில் உள்ள வீடொன்றை சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவப் புலனாய்வு ஆயுத தாரிகள் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது-32) என்பவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் நான்கு விமானங்கள்; சிறி.புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இயங்கு நிலையில் நான்கு விமானங்கள் இருப்பதாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இவற்றில் ஒரு விமானம் இரட்டை இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையில் உள்ளதாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் விடுதலைப் புலிகளினால் 11 கப்பல்களில் ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது விடுதலைப் புலிகளின் படையணிகள் அனைத்தும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தமிழீழ தேசியத் தலைவர் யாரை ஆதரிப்பார்? ரூபவாஹினியின் கருத்துக்கணிப்புக்கு சந்திரிகா தடை

(கொழும்பு)

சிறிலங்கா அரச தொலைக்காட்சியான ரூபவாஹினியில் தமிழீழ தேசியத்தலைவர் தொடர்பான செல்லிடப் பேசி குறுந்தகவல் மூலமான கருத்துக்கணிப்புக்கு சந்திரிகா குமாரதுங்க தடை விதித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பாரா? பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பாரா? என்ற கருத்துக்கணிப்பை செல்லிட பேசி குறுந்தகவல் சேவை மூலம் ரூபவாஹினி நடத்தியது.

இது தொடர்பான அறிவிப்புகள் அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும் ஒலிபரப்புச் செய்யப்பட்ட நிலையில் இந்தக் கருத்துக்கணிப்பை நிறுத்துமாறு சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டார். இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கிவிடுவதாக எம். எம். சுஹைறை சந்திரிகா எச்சரித்தும் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அக்கரைப்பற்றில் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நேற்றிரவு ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்மாந்துறை இலங்கைப் போக்குவரத்துச்சபை பணியாளராகிய தாசபுத்திரன் தாசகுமார் (வயது-33) என்பவரே இரவு 7.30 மணியளவில் அவரது வதிவிடத்தில் வைத்துச் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

காளிகோவில் வீதி, ஆலையடி வேம்பிலுள்ள அவரது வதிவிடத்திற்கு உந்துருளியில் வந்த ஆயுததாரிகள் இவர் மீது கைத்துப்பாக்கியால் சுட்டதாக சிறிலங்காப் பொலிசார் கூறுகின்றனர்.

## தேர்தலில் வாக்களிக்குமாறு கோரும் பிரசுரம் எம்மால் வெளியிடப்படவில்லை

### யாழ். மாவட்ட அரசியல்துறை

(பளை)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்குமாறு கோரும் துண்டுப்பிரசுரம் எம்மால் வெளியிடப்படவில்லை என யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளின் இலட்சினையுடன் யாழ். மாவட்ட அரசியல் துறை வெளியிட்டதாக தெரிவித்து, சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்காமல் அதில் பங்குபற்றி வாக்களிக்குமாறு பொது மக்களைக் கோரும் பிரசுரங்கள் யாழ். மாவட்ட அரசியல்துறையினரால் வெளியிடப்பட்டவை அல்ல. சில தீய சக்திகள் தங்களது கபட நோக்கங்களுக்காக எமது பெயரைப் பயன்படுத்தி பிரசுரங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் துப்பாக்கிச் சூடு தமிழ் வர்த்தகர் படுகாயம்

(கொழும்பு)

புத்தளம் - மன்னார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றிற்குள் நேற்றுக் காலை 9.00 மணியளவில் நுழைந்த இரு அடையாளம் தெரியாத நபர்கள் அதன் உரிமையாளர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பியோடியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த நிலையில் அக் கடையின் உரிமையாளரான பத்மலிங்கம் (வயது-39) என்பவர் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கான பின்னணி அறியப்படவில்லை.

## கொத்தணிவாக்களிப்பு நிலையங்களுக்கு தென்பகுதியில் இருந்து பணியாளர்கள்

(கொழும்பு)

இலங்கையின் சனாதிபதித் தேர்தலையொட்டி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்காக அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றுவதற்கென மேலதிகமாக கொழும்பில் இருந்து அதிகாரிகள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வடகிழக்கு மாவட்டங்களிலுள்ள உதவித்தேர்தல் ஆணையாளர்களுக்கு இந்த அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் பிரதேசங்களைச்சேர்ந்த வாக்காளர்கள் அவர்களுக்கு கிட்டிய இராணுவப்பிரதேசங்களில் அமைக்கப்படுகின்ற வாக்குச் சாவடிகளுக்கு வந்து வாக்களிப்பதே வழமை. இம்முறையும் இந்த நடைமுறையே பின்பற்றப்படவுள்ளது எனவும் இந்த வாக்களிப்பு நிலையங்களில் வழமைபோல கடமையில் ஈடுபடவுள்ள அந்தந்த தேர்தல் மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரி களுக்கு உதவிபுரிவதற்காகவும், வாக்களிப்பின்போது முறைகேடுகள் நடைபெறா திருப்பதை தடுப்பதற்காகவும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய இந்தப் புதிய ஏற்பாடு செய்யப்படுவதாகவும் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## திருமலையில் சுழல்காற்று 24 வீடுகள் பலத்த சேதம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரை அடுத்துள்ள நித்தியபுரியில் சுமார் 24 வீடுகள் சுழற்காற்று வீசியதால் பலத்த சேதமடைந்தன. வீட்டின் கூரைகள் முற்றாகத் தூக்கியெறியப்பட்டன. வீடுகளில் இருந்த பொருட்கள் முற்றாகச் சேதமடைந்தன. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டார். நித்தியபுரி கிராம அபிவிருத்தி சபையின் தலைவர் மகேந்திரராசா வையும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ண சிங்கம் சந்தித்தார். சேதமடைந்த வீடுகளைத் திருத்துவது தொடர்பான

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய ஐரோப்பிய ஒன்றியம் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வாழும் மக்களின் சனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடைபெறுமா என்பது குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்துள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஷ்ட தேர்தல் கண்காணிப்பாளர் ஹனனா வெலசிவிஸ் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

இதற்காக இவர்கள் யாழ். மாவட்ட அரச அதிபரும், மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான கே.கணேஷ் மற்றும் உயர் அதிகாரிகளையும், படைத்தரப்பினர், பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள், கல்வி மான்கள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் சமயப் பெரியார்கள் எனப் பல தரப்பட்ட தரப்பினரையும், சந்தித்தும் பேச்சுக்களை நடாத்தி வருகின்றனர்.

இதன் போது எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக யாழ்குடாநாட்டு மக்களுக்குள்ள எதிர்பார்ப்பு அபிலாசைகள் என்பன (12ஆம் பக்கம் பார்க்க)

# மூத்த தளபதி மேஜர் கணேஸ் நினைவுநாள் திருமலை கணேசபுரத்தில் அனுஷ்டிப்பு

மூத்த தளபதி மேஜர் கணேஸ் அவர்களின் பத்தொன்பதாவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் கணேசபுரத்திலுள்ள அவரது நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை திருமலை மாவட்ட சோதியா படையணித் தளபதி மதுரா ஏற்றி வைத்தார். மலர் மாலையினை சிற்பாசிரியர் சிவா அணிவித்தார். இதனையடுத்து திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் உரை நிகழ்த்தினார்.அங்கு அவர் உரையாற்றுகையில்; வாக்குகளை கேட்கின்ற நிலையிலேயே தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் இருக்கின்றார்களே ஒழிய தேர்தல் நடத்துவது பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை, சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்களும் தேர்தல் எவ்வாறு நடைபெறும் என்பதைக் காட்டிலும் தேர்தலை நடத்துவதிலேயே குறியாக இருக்கின்றன.

ஒரு சராசரி மனிதனின் வாக்குரிமை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை ஒருவர் வாக்களிப்பதற்கு 50 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய நிலையே இருக்கின்றது. வாக்காளர்களின் உரிமையை பெற்றுக் கொடுப்பது பற்றி போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் சிந்திக்கவில்லை. தமது வாக்களிக்கும் உரிமைகளைக் கூட பெற்றுத்தருவதை மறுக்கும் இந்த இரண்டு தலைவர்களுக்கும் வாக்களிக்கக் கூடிய மனநிலையில் மக்கள் இல்லை. தமது உரிமையை பெற்றுத்தர முனையாத இந்தத் தேர்தலில் வாக்களிக்க கூடிய மனநிலையில் மக்கள் இல்லையென அவர் தெரிவித்தார்.

# கனகரவியின் "பொங்குதமிழ்" யாழ்.இல் நூல் அறிமுகவிழா

ஊடகவியலாளர் கனகரவியின் "பொங்குதமிழ் நூல் அறிமுகவிழா நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையினை வவுனியா சக்தி தொலைக் காட்சி செய்தியாளர் கபில்நாத் நிகழ்த்த, நூல் அறிமுக உரையை நமது ஈழநாடு துணை ஆசிரியர் ஆர்.கே.மேனன் நிகழ்த்தினார். முதற் பிரதியை யாழ் மாநாகர ஆணையாளர் சி.வி. கே.சிவஞானம் வழங்க, அரசாங்க செயற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த ஜெ.கிரிதரன் பெற்றுக் கொண்டார். சிறப்பு பிரதிகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் வழங்கிக் கௌரவித்தார்.

மதிப்பீட்டுரையை எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தி நிகழ்த்த சிறப்புரையை யாழ். மாவட்ட பதில் நீதிபதியும், சட்டத்தரணியுமான பொன். பூலோகசிங்கம் நிகழ்த்தினார். ஏற்புரையை நூலாசிரியர் கனகரவி நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான மா.க. ஈழவேந்தன், ரவிராஜ், சிவனேசன் ஆகியோர் உட்பட நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர். (10)

## பழைய மாணவர் சங்க கலந்துரையாடல்

(மல்லாவி)

மல்லாவி மத்திய கல்லூரியில் பழைய மாணவர்சங்கக் கூட்டம் அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரி மண்ட பத்தில் புதிய அதிபர் ஜெயபாலன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதானமாக பாடசாலையில் இனங்காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பிரித்தானியக்கிளையிடம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சாதாரண தர உயர்தர மாணவர் அனைவருக்கும் உதவு தொகை வழங்கல்,கட்புல சாதனம், இலத்திரனியல் உபகரண பயன்பாட்டுக்கு மின் பிறப்பாக்கி பெறல், விளையாட்டு மைதானம் திறந்த அரங்கு திருத்தம், வேலி அமைத்தல், தொலைத்தொடர்பு பெறல் போன்ற வசதிகளை இவ் பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். (24)


## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

பரவிப்பாஞ்சான் 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சில்லறை ப.நோ.கூ.சங்கத்தில் இருந்து 50 யார் தொலைவில் அமைந்துள்ள 4 பரப்பு 3 பேச் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
இராமசாமி புவனேந்திரன் J.P,
கோபிகடை, கரடிப் போக்குச்சந்தி,
கிளிநொச்சி. (6907)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும். பிள்ளையார் பொத்தக சாலை. கண்டிவீதி, கிளிநொச்சி.
T.P.2285750 (சி.13263)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Wep Site Designing**

உங்களது வியாபார நிறுவனங்களைச் சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம்செய்திடவும்.வியாபார நிறுவனத்தின் பெயரில் இணையத் தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்,

*தொடர்புகட்கு:-*
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்,
டிப்போ வீதி,கிளிநொச்சி (சி.13074)


## சாவு அறிவித்தல்

### சண்முகராசா ஆனந்தகுமார் (ஆனந்தன்)



இல.2 கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயனை வதிவிடமாகக்கொண்ட சண்முகராசா ஆனந்தகுமார் 04.11.2005 அன்று காலமாகிவிட்டார். இவர் சிறியின் அன்புக் கணவரும், துஸ்யந்தி, யாழினி, ஷெழுவேள் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 07.11.2005 இன்று ஸ்கந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


இல:-02,
கெங்காதரன்குடியிருப்பு,
அக்கராயன். (சி.13263)

தகவல்:- திருப்பணியாளர் திருச்சபை,
இலங்கை மெதடிஸ்த திருச்சபை,
வன்னிதிருப்பணி.

# வட்டக்கச்சி இராமநாதபுரம் ம.வி கட்டடத் தொகுதிகள் திறப்பு

வட்டக்கச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய புதிய ஏழு கட்டடத் தொகுதிகளின் திறப்பு விழாவானது நேற்றுக் காலை 9.30 மணியளவில் பாடசாலையின் முதல்வர் க. இரத்தினகுமார் தலைமையில் இடம்பெற்றது. பாடசாலை வளாகத்தின் முன்புறமாக இருந்து விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு பாடசாலையின் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயிலை தளபதி சசிக்குமார் திறந்துவைத்தார். தொடர்ந்து பாடசாலை வளாகத்தை அடைந்தவுடன் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடியினை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றிவைத்தார். அகவணக்கத் துடன் ஆரம்பமான நிகழ்வில் மாடிக்கட்டடத்தினை-வலயக கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவும்.நூலகத்தினை போராளி-திட்டமுகியும், விஞ்ஞான ஆய்வு கூடத்தினை கிளி. மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் சி. அறிவன்பனும் செயற்பாட்டு அறையினை ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ. தனராசாவும், அழகியற்பாட மண்டபத்தினை அழகியற்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி த. தட்சணாமூர்த்தியும், பொது மண்டபத்தினை பிரதிக்கல்விப்பணிப்பாளர் இ. சின்னராசா (நிர்வாகம்) ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக நாடாவைவெட்டித் திறந்து வைத்தனர். தொடர்ந்து கருத்துரைகளை பாடசாலையின் முதல்வர், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் கிளி.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர், ஆகியோர் நிகழ்த்தினார்கள். பாடசாலையின் பிரதி அதிபரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றது. (12)



# மன்னார் மடுப்பிரதேசத்தில் நெருப்புக்காய்ச்சல் அபாயம்

(மடு)

மன்னார் மாவட்டம் மடுப்பிரதேசத்தில் நெருப்புக்காய்ச்சல் ஏற்பட்டோர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக திலீபன் நடமாடும் மருத்துவமனை மருத்துவர் தெரிவித்துள்ளார்.

அப்பிரதேசத்திலுள்ள முள்ளிக்குளப்பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்களுக்கு நெருப்புக்காய்ச்சல் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதெனவும் எனவே இது தொடர்பாக வரும் புதன்கிழமை மடுப்பிரதேசத்திலுள்ள கீரிசுட்டான் முள்ளிக்குளம்,வலயன்கட்டு, பரிசன்குளம் விளாத்திக்குளம் ஆகிய கிராமமக்களை ஒன்றிணைத்து கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (40)

# வாய்ச் சுகாதாரம் தொடர்பாக வலையன் கட்டில் கருத்தரங்கு

(மடு)

மன்னார் மாவட்டம் வலையன் கட்டுப்பாடசாலையில் கடந்த வியாழக் கிழமை வாய்ச்சுகாதாரம் தொடர்பான நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

மாவட்ட திலீபன் நடமாடும் மருத்துவ மனையினரும் மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து அன்றுகாலை 10.00 மணிக்கு இந் நிகழ்வை நடத்தினர். வாய்ச்சுகாதாரம், வாய்ப்புற்று நோயை ஆரம்ப நிலையில் இனங்காணல் , அடிப்படை விழிப்புணர்வு, மருத்துவ முறைகள் தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் பங்கேற்றனர். (40)


KEN இலங்கையின் முதல்தர விநியோகஸ்தர்கள்

பிள்ளையார் பல்பொருள் உதிரிகள் வாணிபம்



இல,308 கந்தசுவாமி கோவில் முன்பாக,
பிரதானசாலை, கிளிநொச்சி.
துணுக்காய் சாலை, மல்லாவி.
தொ.பே.021 2285945

நவம்பர் 5ஆம், 6ஆம்,7ஆம் திகதிகளில் KEN மின்கருவிகள் இலவசமாகப் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

அத்துடன்10 %கழிவு வழங்கப்படும்.

(சி.13312)

# அமெரிக்க நகரங்களைத் தாக்க பயங்கர சதி மூன்று தீவிரவாதிகளிடம் தீவிரவிசாரணை

(நியூயோர்க்)

**லண்டனில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட மூன்று தீவிரவாதிகளும் அமெரிக்கப் பாராளுமன்றம் மற்றும் வெள்ளை மாளிகை உட்பட பல முக்கிய இடங்களைக் குண்டுவைத்துத் தகர்க்க போட்டிருந்த சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. இதன் மூலம் மிகப்பெரிய பேரழிவு தடுக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது

யூனிஸ் (வயது-22), வாசிம் முகல் (வயது-22), அல்துர் (வயது-19) என்ற மூன்று தீவிரவாதிகள் சமீபத்தில் லண்டனில் கைது செய்யப்பட்டனர், அவர்களிடம் அமெரிக்க மற்றும் பிரிட்டன் பொலிசார் நடத்திய விசாரணை மற்றும் அவர்களிடம் கிடைத்த பொருட்கள் மூலமாக அமெரிக்காவின் பாராளுமன்றம் மற்றும் வெள்ளை மாளிகை உட்பட பல முக்கிய இடங்களைக் குண்டுவைத்துத் தகர்க்க தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இவர்கள் அமெரிக்காவிலிருந்து பிரிட்டன் மற்றும் பொஸ்னியா பகுதி வரை பரவியுள்ள தீவிரவாதக்குழுக்களின் ஒரு அங்கமாக இருக்கலாம் என்றும் அமெரிக்க மற்றும் பிரிட்டன் பொலிஸ் அதிகாரிகள் நம்புகின்றனர். கைது செய்யப்பட்ட யூனிஸ்சவுலியிடம், வோஷிங்டனில் உள்ள முக்கிய இடங்கள் பற்றிய புகைப்படத்துடன் கூடிய விபரங்கள் அடங்கிய கணினி மென்பொருள் மற்றும் பேரழிவு ஆயுதங்களிற்கு தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் வாகனம் ஒன்றும் பறி முதல் செய்யப்பட்டது. இதுதவிர கார்க்குண்டை வெடிக்கச் செய்யும் காட்சிகளைக் கணினியில் அந் நபர் பதிவு செய்திருந்தார்.



ஹொங்கொங்கில் வேகமாக உணவு உண்ணும் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. விதவிதமான உணவுகளை 12 நிமிடத்தில் உண்டு முடிக்க வேண்டும் என்பது போட்டியின் விதிமுறை. அதற்காக இவர்கள் புயல் வேகத்தில் உண்கின்றனர்.




பிலிப்பைன்ஸில் அமெரிக்க தூதரகத்தின் முன் அமெரிக்க கடற்படையினருக்கு எதிராக தன் குழந்தையுடன் கோசமிடும் பெண்.

# ஈரான் ஊடாக ஈராக்கிற்குள் வெடிகுண்டுகள் இங்கிலாந்து இராணுவ அதிகாரி குற்றச்சாட்டு

(லண்டன்)

ஈராக்கிற்கு ஈரான் வழியாக வெடிகுண்டுகள் கடத்தப்படுகின்றன என இங்கிலாந்து இராணுவ அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈராக்கில் தினந்தோறும் ஏதாவது ஒரு இடத்தில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடிக்கின்றன. இதில் பொதுமக்கள் பலர் பலியாவதோடு, அமெரிக்க இராணுவத்தினரும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஈராக் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், அமெரிக்க வீரர்கள் 2035 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 15 ஆயிரத்து 500பேர் காயமடைந்துள்ளனர். இதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்க இராணுவத்தலைமையகம் பெண்டகன் இறங்கியுள்ளது. இந்நிலையில் ஈராக்கிலுள்ள இங்கிலாந்து இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் டட்டன் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஈரான் எல்லை வழியாக ஈராக்கிற்குள் வெடிகுண்டுகள் நுழைகின்றன. சில சமயங்களில் வெடிமருந்துப்பொருட்களாகக் கொண்டுவரப்பட்டு ஈராக்கில் குண்டுகளை நவீனத்தொழில் நுட்பத்துடன் தீவிரவாதிகள் தயாரிக்கின்றனர். ஈரான் அரசு, உளவுத்துறை அல்லது வேறு ஏதாவது அமைப்புக்கள் ஈராக் தீவிரவாதிகளுக்கு உதவுகின்றனவா என சரியாகத் தெரியவில்லை. வெடிகுண்டுகள் மற்றும் இதைத் தயாரிப்பதற்கான நவீன தொழில் நுட்பம் ஆகியவை ஈரான் எல்லை வழியாகத்தான் வருகின்றன என நம்புகின்றோம்.

சிலிண்டர்களில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்டு அதை ஸ்டீல் தகடுகளால் மூடி குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய குண்டுகள் இராணுவக் கவச வாகனங்களையும் தகர்க்கிறது. ஈராக் அரசு, எல்லை பாதுகாப்புப் படை, பொலிஸ் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டுப்படையினர் எல்லைப்பகுதியில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என ஜேம்ஸ் டட்டன் கூறினார்.

# அதிகம் குடிப்பவர்களைவிட குண்டானவர்களுக்கு ஆபத்து அதிகம்

(சிட்னி)

நம்மில் பலருக்கும் மது குடிப்பது உடல் நலத்துக்குத் தீங்கானது என்பது தெளிவாகத் தெரியும்.

ஆனால் அதை விடவும் ஆபத்தான விஷயங்கள் சில இருக்கின்றன என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

மதுபானங்களை விடவும் குண்டாக இருப்பதுதான் மிகப்பெரிய தீமை தரும் விஷயமாம். குடிகாரராக இருப்பதைவிடவும் மிகவும் குண்டானவராக இருந்தால் உங்கள் கல்லீரலுக்கு அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

சாதாரணமாக அதிகம் குடிப்பவர்களுக்கு கல்லீரல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இருமடங்கு அதிகம். அதே சமயத்தில் குண்டானவர்களாக இருந்தால் ஆபத்து ஏழு மடங்கு அதிகமாம். இந்த ஆய்வு 2500க்கும் அதிகமானோரிடம் நடத்தப்பட்டது. இதன் முடிவில் இத்தகவல் வெளியாகி உள்ளது.

அவுஸ்திரேலியாவில் தற்போது வயது வந்தோரில் 60 சதவீதத்தினர் அளவுக்கு அதிகமான எடையுடன் உள்ளனராம் இந் நிலையில் இந்த ஆய்வு மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

நீங்கள் குண்டானவராகவும் இருந்து மதுபானங்களையும் அதிகமாகக் குடிப்பவராக இருந்தால் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுகிறீர்கள் என்கிறார் ஓர் ஆராய்ச்சியாளர்.

# பரிசில் தொடர்கிறது கலவரம் ஒருநாளில் மட்டும் 754 வாகனங்கள் எரிப்பு

(பரிஸ்)

பரிசின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்பதாவது நாளாக நேற்றும் கலவரம் தொடர்ந்தது. கடந்த வெள்ளி இரவு 754 வாகனங்களை கலகக்காரர்கள் தீ வைத்து கொளுத்தினர்.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து குடிபெயர்ந்து பரிசில் குடியுரிமை பெற்று வாழும் முஸ்லிம் மக்கள், தங்களுக்கு உரிய அரசியல் உரிமைகள் தரப்படவில்லை என கடந்த பத்து ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். குறிப்பாக, இளைஞர்கள் தங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்றும், பொருளாதார ரீதியாக தாங்கள் பின்னுக்கு தள்ளப்படுவதாகவும் பெரும் கொந்தளிப்பில் இருந்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த ஒக்., 27 இல் கிளிச்சி-சாஸ்-பாய்ஸ் பகுதியில் முஸ்லிம் சிறுவர்கள் இருவர், பொலிசார் தங்களை துரத்துவதாக தவறாக நினைத்து அருகில் இருந்த மின்மாற்றிக் கட்டடத்திற்குள் ஒளிந்தனர். அப்போது மின்சாரம் தாக்கி இருவரும் பரிதாபமாக இறந்தனர்.



இதையடுத்து, பரிஸ் புறநகர் பகுதிகள் முழுவதும் பெரும் கலவரம் வெடித்தது. பொலிசார் ஆபிரிக்க இளைஞர்களை கண்மூடித்தனமாக தாக்குவதால் தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பதாகக் கூறி கடந்த ஒன்பது நாட்களாக தொடர்ந்து இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர், குறிப்பாக, வடக்கு ஆபிரிக்கா மற்றும் கறுப்பின ஆபிரிக்க இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபடுகின்றனர். பொலிசாரை குறிவைத்து தாக்குகின்றனர். வாகனங்கள், பள்ளிக் கட்டடங்கள், வர்த்தக நிறுவனங்களுக்கு கலகக்காரர்கள் தீ வைத்தனர். ஒவ்வொரு இரவிலும் பல வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்படுகின்றன. அதிகபட்சமாக கடந்த வெள்ளி இரவு மட்டும் 754 வாகனங்கள் தீ வைக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். பரிசின் முக்கிய நகரங்களான ஸ்டிராஸ் போர்க், ரெனிஸ், டலவுஸ் மற்றும் லில்லி ஆகிய பகுதிகளில் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது.

# நாடு முழுவதும் பூகம்ப எச்சரிக்கைக் கருவி அடுத்த ஆண்டில் நிறுவ ஜப்பான் திட்டம்


(டோக்கியோ)

பூகம்ப எச்சிரிக்கைக் கருவியை அடுத்த ஆண்டுக்குள் நாடுமுழுவதும் நிறுவ ஜப்பான் திட்டமிட்டுள்ளது. பூகம்பம் ஏற்படும் 15 வினாடிகளுக்கு முன்னதாக அபாய எச்சரிக்கை விடுக்கும் இந்தக் கருவியின் மூலம் பெரும் இழப்புக்கள் தவிர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலகிலேயே பூகம்பம் அதிகம் ஏற்படக்கூடிய பகுதி ஜப்பான் ரிச்டர் அளவில் ஏழு புள்ளிகளைத் தாண்டிய பேரழிவு பூகம்பங்கள் ஏராளமாக இங்கு ஏற்பட்டு வருகின்றது.

உலகில் ஆறு புள்ளிகளுக்கு மேல் பதிவாகும் பூகம்பங்களில் 20 சதவீதம் ஜப்பானில் நிகழ்கிறது. கடந்த 1995இல் ஜப்பானின்போப் நகரத்தில் ஏற்பட்ட பூகம்பம் ரிச்டர் அளவில் 7.3 எனப் பதிவானது இந்தப் பூகம்பத்தில் ஆறாயிரத்து 400 இற்கும் அதிகமானோர் பலியாகினர். கடந்த 2004இல் ஜப்பானின் வடக்குப் பகுதியில் ஏற்பட்ட 6.8ரிச்டர் அளவு பூகம்பத்தில் 40 பேர் இறந்தனர் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் இது போன்ற பேரிழப்புக்களை உண்டாக்கும் பூகம்பம் ஏற்படும் முன்பாக அதைக் கண்டுபிடித்துச் சொல்லும் கருவியை தயாரிக்க நிபுணர்கள் திட்டமிட்டிருந்தனர். அதன்படி புதிய கருவி ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கினர். நில அதிர்வுகள் ஒருபகுதியை வந்தடைவதற்கு 15 விநாடிகள் முன்னதாக இந்தக் கருவிமூலம் அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பப்படும். ரயில்கள் எரிவாயு நிறுவனங்கள் உள்ளிட்ட பெரும் சேதம் ஏற்படக் கூடிய இடங்களுக்கு எச்சரிக்கை அனுப்பப்படும். சில மணித்துளிகளே கிடைத்தாலும் கூடிய விரைவில் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியும்.

சோதனை முறையாகக் கடந்த பெப்ரவரியில் இந்தக் கருவி ஜப்பான் மியாகிப்பகுதியில் பொருத்தப்பட்டது. ஓகஸ்ட் 16ல் 7.2 ரிச்டர் அளவில் சென்டாய் நகரைத் தாக்கிய பூகம்பம் பற்றி 15 விநாடிகளுக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



அடுத்த ஆண்டு சனவரி மாதம் புளூட்டோக் கிரகத்தை நோக்கி நியுஹரைசன் என்ற விண்கலத்தை செலுத்துவதற்காக அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண் ஆராய்ச்சி நிலையத்தில் விண்கலத்தை விஞ்ஞானிகள் அமைத்து வருகின்றனர்.

# சிறுவர், பெண்கள் உரிமைகளை வலியுறுத்தி காவல்துறையினர் மக்களுக்கு கருத்தூட்டல்

## - கிராம மட்டத்தில் தொடர்ந்தும் முன்னெடுப்பு

(மல்லாவி)

**சிறுவர், பெண்கள் உரிமைகள் சமூகத்தில் மதிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் செயற்பாட்டு நிகழ்வுகள் தமிழீழ காவல்துறையினரால் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இந்த வகையில் நேற்று முன்தினம் காலை கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை காவல்துறையின் குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பரிசோதகர் சு.கிருபாகரன் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து கனகராயன்குளம் வடக்கு கிராமசேவகர் தணிகாசலம் ஆசியுரை வழங்கினார்.

மாங்குளம் காவல் பணிமனைப் பொறுப்பாளர் த.கமலசிறிஸ்கரன் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வு நிகழ்வுகளில் பெண்கள் உரிமை தொடர்பான கருத்துக்களை உபபரிசோதகர் இ.றோய்காந்தும், சிறுவர் உரிமை தொடர்பான கருத்துக்களை உபபரிசோதகர் நா.வதனகுமாரும் வழங்கினர். கருத்துக்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான அரங்க செயற்பாடுகளும் நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வில் பெருமளவு பெற்றோர், மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றி பயன்பெற்றதுடன் இப்படியான செயற்பாடுகளை கிராம மட்டத்தில் முன்னெடுத்து வரும் காவல்துறையினருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (24)



# வாய்ப் புற்றுநோயை ஆரம்பத்தில் இனங்காண நடவடிக்கை

தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்கமைப்பில் வன்னிப் பிரதேசமெங்கும் வாய்ப்புற்று நோயை ஆரம்பத்திலேயே இனங்காண்பதற்கான வேலைத் திட்டங்களும் விழிப்புணர்வும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு பாவனையுள்ளவர்கள் தமது வாய் மென்சவ்வில் ஏதாவது வித்தியாசம் காணப்படின் - உணரின் தயவு செய்து அயலிலுள்ள தமிழீழ சுகாதார சேவையினரை அல்லது திலீபன் மருத்துவ சேவையினரை அல்லது பல் வைத்தியர்களிடம் தங்களைப் பரிசோதித்துக் கொள்ளுமாறு மக்களை தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# சா/த பரீட்சைக்கு தோற்றுவோருக்கு இன்று விசேட வகுப்புக்கள்

(மல்லாவி)

துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் விசேட வகுப்புக்கள் இன்று ஏழாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரையும் நடைபெறவுள்ளன. இதில் தமிழ், சமூகக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களிற்கே விசேட வகுப்புக்கள் நடைபெறும்.

மு/மாங்குளம் மகாவித்தியாலயம், மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/பாலிநகர் ம.வி., மு/ஒட்டுசுட்டான் ம.வி. ஆகிய பாடசாலைகளில் இவ் விசேட வகுப்புக்கள் நடைபெறும். இதற்கான சகல ஏற்பாடுகளும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் அவர்களினால்மேற்கொள்ளப்படுகிறது எனப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.விஜயபாலா தெரிவித்தார். (24)

# மாவீரர் நாளை முன்னிட்டு வர்த்தகர்களுடன் சந்திப்பு

(வட்டக்கச்சி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தகர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் வர்த்தக சங்கத்தலைவர் சந்திரன் தலைமையில் வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கருத்துரைகளை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடர் நிகழ்த்தினார். (12)

# படகுத் தொகுதிகள் வழங்கல்

(முல்லை)

சுனாமியினால் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மீனவர்களில் 21 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் படகுத் தொகுதிகள் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் வைத்து வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் 100 படகுத் தொகுதிகளில் ஏற்கனவே 79 படகுத் தொகுதிகளில் வழங்கப்பட்டு தற்போது இறுதியாக 21 படகுத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் உபதலைவர் இ.தணிகாசலம் தலைமையில் ஆரம்ப மான நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழக் கடற்படை முல்லை நகரத் தளபதி க.தினேஷ் வழங்கினார்.

தொடர்ந்து வெளிஇணைப்பு இயந்திரங்களையும், படகுகளையும் வலைத் தொகுதியினையும் க.தினேஷ், இ.தணிகாசலம் ஆகியோர் வழங்கினர்.(20)

# மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம்!

(அலுவலகசெய்தியாளர்)

வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் கிராம மக்கள் குடியிருப்புக்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதனால் அப்பகுதி மக்கள் இரவு வேளைகளை அச்சத்துடன் கழிப்பதாகத் தெரியவந்துள்ளது.


கடந்த புதன்கிழமை நள்ளிரவு ஆனைவிழுந்தான் மக்கள் குடியிருப்பினுள் பிரவேசித்த காட்டு யானைக் கூட்டம் அங்கிருந்த தென்னை, பலா போன்ற மரங்களை முறித்து துவம்சம் செய்துள்ளது. பல வருடங்களுக்கு பின்பாக மேற்படி யானைக்கூட்டம் ஆனைவிழுந்தான் கிராம மக்கள் குடியிருப்புகளுக்குள் பிரவேசிக்கத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து பயப்பீதியுடன் இரவு வேளைகளைக் கழித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(சோ)

# மன்னார் நகரப் பகுதியில் ஈருருளிகளின் களவு அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் ஈருருளிகளின் களவு அதிகரித்துள்ளது. தனியார் கல்வி நிலையங்கள், வாசிகசாலை போன்ற இடங்களில் பொதுமக்களினால் நிறுத்தி வைக்கப்படும் ஈருருளிகளே இவ்வாறு களவாடப்பட்டு வருகின்றன. இந்த வாரத்தில் மட்டும் பத்திற்கும் மேற்பட்ட ஈருருளிகள் மன்னாரில் களவு போயுள்ளன.

இதேவேளை கடந்த புதன்கிழமை வங்காலை கிராமத்தில் ஏழு ஈருருளிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் அடையாளம் காணும் பொருட்டு மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (18)



துணுக்காய் பிரதேச அலிஞ்சியன்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட அலிஞ்சியன் குளம் இரண்டாம் பகுதிக்குச் செல்லும் வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் சீரழிந்து காணப்படுவதைப் படத்தில் காண்க. (படம்-அன்ரனி)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடமைக்க அடிக்கல்நாட்டல்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை, தீர்த்தக்கரை மக்களுக்கான நிரந்தர வீடமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

சிலாவத்தை ஊரக மேம்பாட்டு பேரவை உறுப்பினர் வை.கெங்காதரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் அடிக்கல்லினை கிராம அலுவலர் செல்வி.எஸ். சுமதி, சிலாவத்தைவிநாயகர் ஆலய குருக்கள் விநாயகமூர்த்தி, சேவாலங்கா நிறுவனப்பிரதிநிதிகள் ஆகியோர் நாட்டினார்கள். இந் நிகழ்வில் கிராமமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கோயில்குடியிருப்பு கிராமமக்களுக்கு நிரந்தர வீடமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் இடம்பெற்றது.

வேள்ட்விசன் நிறுவனத்தினரால் அமைக்கப்படவுள்ள இந்த நிரந்தர வீடுகளிற்கான அடிக்கல்நாட்டு விழா ஊரகமேம்பாட்டு பேரவை தலைவர் மோகன் தலைமையில் ஆரம்பமானது.

அடிக்கல்லினை முல்லை மாவட்ட வேள்ட்விசன் நிறுவன பொறியியலாளர் நெப்போலியன், வீட்டின் உரிமையாளர்,கிராமஅலுவலர் ரஜிந்திரா ஆகியோர் நாட்டினார்கள். வேள்ட்விசன் நிறுவனத்தால் கள்ளப்பாடு தெற்கு, வட்டுவாகல், சாளம்பன் ஆகிய கிராமங்களுக்கு வெகுவிரைவில் நிரந்தர வீடு அமைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

## கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கான விசேட பொதுக்கூட்டம் கடந்த மாதம் 29 ஆம் திகதி சங்கத் தலைவர் தலைமையில் காலை 10.00 மணியளவில் அக வணக்கத்துடன் சங்க கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வுக்கு மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சங்கக் கிளைகளிலுள்ள அங்கத்தவர்கள் தலைவர்கள் என மொத்தம் 28 உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். தலைவர் இதன் போது சங்கங்களின் நடைமுறைகளையும் அதன் வளர்ச்சியையும் கூறியதுடன் உரகொள்வனவு சம்பந்தமாகவும் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

## கண்டெடுப்பு

புதுக்குடியிருப்பில் இயங்கும் மக்கள் வங்கி முல்லைக் கிளையில் சிறுதொகைப் பணம் கடந்த 31 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டு மக்கள் வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணத்திற்கு உரியவர் ஆதாரத்தினைக் காட்டி புதுக்குடியிருப்பு மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (20)

# இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் வாசிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் "மிளிர்" திறன்விருத்திக் குழுமத்தால் நடாத்தப்பட்ட நூல் சேகரிப்புத்திறன் பாராட்டு நிகழ்வும், வாசிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கிளி. உருத்திரபுரம் ம.வி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கிளி. உருத்திரபுரம் ம.வி பாடசாலைச் சமூகம், சனசமூக நிலையம் என்பவற்றின் அனுசரணையுடன் அதிபர் கணேசதாசன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரைகளை பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் குகராசா, "மிளிர்" அமைப்பாளர் பியசீலன் ஆசிரியர் ஆகியோர் நிகழ்த்த, வாசிப்பு விழிப்புணர்வு சம்பந்தமான சிறப்புரையை எழுத்தாளர் நிலாந்தன் ஆற்றினார்.



நூல் சேகரிப்பில் ஈடுபட்ட மாணவர்களுக்கான பரிசில்களை இளையோர் செயற்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் விஜி உட்பட விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர். நன்றியுரையை உருத்திரபுரம் சனசமூகநிலையச் செயலாளர் கணேசலிங்கம் நிகழ்த்தினார்.

நிகழ்வில் வாசிப்பு விழிப்புணர்வுக்கான கையேடு ஒன்று அனைவரிற்கும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் உருத்திரபுரத்தைச் சூழவுள்ள கிளி. இந்துக்கல்லூரி, புனிதபற்றிமா வித்தியாலயம், சிவநகர் அ.த.க பாடசாலை, புதுமுறிப்பு விக்னேஸ்வரா ஆகிய பாடசாலைகளின் மேல்வகுப்பு மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# பாத்தீனியம் விஷச் செடியின் பரம்பல் குடாநாட்டில் வேகமாக அதிகரிப்பு!

## -பொதுமக்களை ஒத்துழைக்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் பாத்தீனியம் விஷச் செடியின் பரம்பல் மிக வேகமாக அதிகரித்துள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் சுமார் 183 ஏக்கர் நிலப் பரப்பில் இப்பாத்தீனியம் விஷச் செடியின் பரம்பல் காணப்படுகின்றமை கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரக் கணக்கெடுப்புகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள பணிப்பாளர் கூறியுள்ளார்.

இவ்வாறான பாத்தீனியம் விஷச் செடியின் பரம்பல் அதிகம் வலிகாமம் பிரதேசத்திலேயே காணப்படுவதாகவும் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தற்பொழுது பெய்து வரும் அடை மழை காரணமாக இப் பாத்தீனியம் விஷச்செடியின் பரம்பல் மேலும் அதிகரிக்கச் சாத்தியப்பாடு உள்ளதாகவும் இதனால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பாதிப்படையக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் கூறியுள்ள அவர்,

பாத்தீனியம் விஷச்செடியின் பரம்பலைக் கட்டுப்படுத்த துரிதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களது ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றும் கூறியுள்ளார். (33)

# மிதிவெடி அபாயத்தால் மீள்குடியமர்வு பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.காக்கைதீவுப் பகுதியில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பி[illegible]தேசங்களில் காணப்படும் மிதிவெடி அபாயத்தால் அப்பகுதியில் மீள[illegible]குடியமர்த்தும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக சண்டிலிப்பாய் பிரதே[illegible] செயலகம் அறிவித்துள்ளது.

மேற்படி பகுதி இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்தவேளை அங்கு இராணு[illegible]வத்தினரால் ஏராளமான மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. த[illegible]போது இப்பகுதியை படையினர் மக்கள் பாவனைக்காக விடுவித்துள்ள போது[illegible] அப்பகுதியில் இருக்கும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

இதனால் அங்கிருந்து இராணுவ ஆக்கிரமிப்புகள் காரணமாக இடம் பெயர்ந்[illegible] மக்களை மீளக்குடியமர்த்த முடியாதிருப்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக[illegible] தகவல்கள் தெரிவிக்கின்றனஇதேவேளை மேற்படிகாக்கைதீவுப்பகுதியானது சண்டி[illegible]லிப்பாய் பிரதேச செயளாளர் பிரிவுக்குட்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.(33)

# வலைப்பின்னல் பாவனைக்கு சுன்னாகத்தில் அதிக பணம் அறவீடு

(நல்லூர்)

சுன்னாகம் நகரப் பகுதியில் அமைந்துள்ள தனியார் வலைப்பின்னலை (NETCAFE) கடையில் கட்டண அறவீடு மிகவும் மோசமான அளவில் அறவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞர்கள் இங்குசென்றுபணத்தைப் பற்றி கவலைப்படாது கூடிய கட்டணத்தைக் கொடுத்து வருகின்றார்கள். இந்த வகையில் ஏனையவர்கள் சென்றாலும் கூட இத்தொகையை அறவிடுவதாகவும் பற்றுச்சீட்டு கேட்டால் பற்றுச்சீட்டு வழங்க மறுத்து வருவதாகவும் பாவனையாளர்கள் கூறுகின்றார்கள்.(41)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பெரும் சுகாதார சீர்கேடு!

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது பெய்துவரும் அடைமழை காரணமாக இங்குள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பெரும் சுகாதார சீர்கேடுகள் நிலவிவருகின்றன.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் வாழ்ந்துவரும் மக்கள் தற்காலிகமாகக் குடியேறி வாழ்ந்து வரும் அகதிமுகாம்கள் பெரும்பாலானவை வெள்ள நீர் தேங்கக்கூடிய தாழ்வான நிலங்களிலும், சதுப்பு நிலப்பகுதிகளிலும் தான் அமைந்துள்ளன.

இதைவிட இங்குள்ள குடியிருப்புக்கள் யாவும் மிக நெருக்கமான முறையில் அமைந்துள்ளதுடன் மக்கள் செறிவும் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வாறு வெள்ள நீர் தேங்கும் இடங்களில் குடியிருப்பு மற்றும் செறிவான மக்கள் குடியேற்றம் என்பவற்றால் தற்பொழுது நிலவும் மழை காலத்தில் இங்கு பெரும் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இதனால் இப்படியான அகதி முகாம்களில் வாழ்வோருக்கு வாந்தி பேதி, வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற தொற்று நோய்களின் தாக்கமும் ஏற்படத் தொடங்கியுள்ளன.

எனினும் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் இவ்வாறன சுகாதாரப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொணடு எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அகதி முகாம்களில் அவலவாழ்வு வாழும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்தியவிடுதி வசதிகள் போதாது இருப்பதாக அவ்வைத்தியசாலை பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

சாவகச்சேரி வைத்தியசாலையானது தென்மராட்சிப் பிரதேசத்துக்குப் பொதுவான ஒரு வைத்தியசாலையாக உள்ள போதும் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இது அடிப்படை வசதிகள் ஏதுமின்றி பல இடர்பாடுகள் மத்தியில் இயங்கி வருகின்றது.

குறிப்பாக இவ்வைத்தியசாலையில் நிலவும் வைத்தியவிடுதி வசதி இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது.

தென்மராட்சின் பல பகுதிகளிலிருந்தும் வருகின்ற நோயாளர்களைத் தங்கவைத்து சிகிச்சையளிக்க வேண்டிய நிலை உள்ளபோதும் அவர்களைத் தங்கவைத்து சிகிச்சையளிப்பதற்குப் போதியளவு விடுதி வசதிகள் இல்லாதுள்ளது.

குறிப்பாக, இங்குவரும் நோயாளர்களைத் தங்கவைத்து சிகிச்சையளிப்பதற்கு சுமார் 150 கட்டில்கள் கொண்ட வைத்தியவிடுதி வசதி தேவைப்படுகின்றபோதும் இங்கு 40 கட்டில்கள் கொண்டவிடுதி வசதிகள் மாத்திரமே உள்ளன. இதன் காரணமாக நோயாளர்களைத் தங்கவைத்து வைத்திய சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக அவ்வைத்தியசாலை பொறுப்பதிகாரி கூறினார். (33)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை!

யாழ்.வடமராட்சிக் கல்வி வலயப்பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாத நிலையில் உள்ளது என வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் செல்வராஜா கவலை தெரிவித்துள்ளார்.

இதனால் வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகள் பலவற்றில் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடமராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் சுமார் 90 ஆரம்பக்கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இது இக் கல்விவலயப் பாடசாலைகளில் தமது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து வரும் மாணவர்களின் கல்வி எதிர்காலத்தையும், கற்றல் செயற்பாடுகளையும் வலுவாகப் பாதித்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வராஜா இவ்வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட்டு இங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (33)




## 27. 10. 2005 02. 11. 2005

27

☐ ஈராக்கில் சன்னி முஸ்லிம் பிரிவினருக்கும் ஷியா முஸ்லிம் பிரிவினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 38 பேர் பலி.

☐ மத்திய இஸ்ரேல் நகரான கதிராவில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் ஐந்து பேர் பலியாகினர். இத்தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் பத்துப் பேர் பலியாகினர், 19 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

☐ நெதர்லாந்து நாட்டிலுள்ள விமான நிலையத்தில் திடீரென பரவியதீயினால் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவதற்காக அடைத்து வைக்கப்பட்டிருந்த 11 பேர் உடல் கருகிப்பலி.

☐ ஜமேக்கா நாட்டில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்க மத இளம்பாதிரியார்கள் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

☐ தென்சீனாவின் குயாங்சி பிராந்தியத்தைப் பூகம்பம் தாக்கியதில் வீடுகள் அதிர்ந்தன. மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறினர்.

☐ கரீபியன் பிராந்தியத்தை அல்பா சூறாவளி பலத்த மழையோடு தாக்கியதில் ஏற்பட்ட மண் சரிவு, வெள்ளப்பெருக்கு என்பவற்றால் 26 பேர் பலி.

28

☐ வெனிசுலா மற்றும் ட்ரினிடாட், க்ரோஷியா ஆகிய இரு தீவுகளிலும் நில அதிர்வு ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.5 புள்ளியாகப் பதிவானது.

29

☐ முஸ்லிம்களின் புனித நகரான மக்காவில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்குண்டு ஏழு பேர் பலி, 40 பேர் காயம்.

☐ இந்திய தலைநகர் புதுடில்லியில் இடம்பெற்ற நான்கு தொடர்குண்டு வெடிப்புக்களால் நூற்றிற்கு மேற்பட்டோர் பலி.



☐ பாக்தாத்தின் வடக்கே பகுபா பிரதேசத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் காரணமாக 25 பேர் பலி, 45 பேர் காயம்.

☐ தமிழகம் திருச்சியில் பாரவூர்தி ஒன்று அரச பேருந்துடன் மோதியதில் 17 பேர் பலி. 32 பேர் காயம்.



☐ ஆந்திரா செகந்திராபாத்தில் இருந்து ரேபள்ளி செல்லும் பயணிகள் புகையிரதம் ராமணா பேட்டை அருகே செல்லும்போது ஆற்றுப்பாலமொன்றில் தடம்புரண்டதில் 200 இற்கும் மேற்பட்ட பயணிகள் பலி, பலர் காயம்.



☐ ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற தொடர் தாக்குதல் சம்பவங்கள் காரணமாக 23 பேர் கொல்லப்பட்டனர்.

30

☐ ஈராக்கிய அரசாங்கத்தின் மூத்த ஆலோசகரும் உப சனாதிபதியுமான அடெல் அப்துல் மெஹ்தியின் சகோதரருமான காலிம் அப்துல் மெஹ்தி பாக்தாத்தில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை.

☐ ஈராக்கில் ஷியாமுஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் ஹொவைதர் எனுமிடத்தில் பாரவூர்தியில் வைக்கப்பட்ட குண்டொன்று வெடித்ததில் 30 பேர் பலியாகினர். 42 பேர் காயமடைந்தனர்.

31

☐ ஈராக்கின் பஸ்ராநகரில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் இருபது பேர் பலி: 40 பேர் காயம்.



01

☐ அமெரிக்க இராணுவத்தின் இராணுவ உலங்குவானூர்தி பாகிஸ்தான் காஷ்மீர்ப் பகுதியில் ரொக்கெட் தாக்குதலுக்குள்ளானது.

02

☐ இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திலுள்ள ஸ்ரீநகரில் இடம்பெற்ற தற்கொலை கார்க் குண்டுத்தாக்குதலில் ஐந்து பேர் பலி: 15 பேர் காயம்.



# சனாதிபதியின் தீர்மானத்தால் இராணுவத்திற்குள் அதிருப்தி!

சனாதிபதி சந்திரிகா கடந்த 25ஆம் திகதி செவ்வாயன்று சிறிலங்காவின் இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். அது இராணுவ உயர் அதிகாரிகள் ஓய்வில் செல்லும் வய தெல்லையை அதிகரித்திருப்ப தாகும். இதன்படி தரைப்படை யில் லெப்டினன்ட் கேணல் ஒருவர், விமானப்படையின் அதிகாரி ஒருவர் அல்லது



கடற்படை அதிகாரி ஒருவர் 60 வயது வரை கடமையில் இருக்கலாம். ஆயினும் முன்பு இவர்களின் வயதெல்லை 55 ஆகும். அவர்கள் சேவை நீடிப்பு பெறறு வந்துள்ளனர். அதன்பின் ஓய்வில் செல்வர். ஓய்வில் சென்ற பின்னரும் பணியில் இருககும் விதிமுறைகள் செய்து கொடுக்கப்பட்டு வந்தன. எனினும் இவற்றைத் தீர்மானிப் பதற்கு சபை ஒன்று இருந்தது. அதன் சிபார்சுகளும் அவசிய மாக இருந்தன.

சிறிலங்கா இராணுவ மேஜர் ஒருவர், கடற்படையின் ரியர் அட்மிரல் ஒருவர் அல்லது விமானப்படையின் பிரதி



அதிகாரி ஒருவர் 58 வயது வரை சேவையாற்றலாம். பிரி கேடியர், கட்டளையதிகாரிகள் 56 வயது வரை சேவையாற்ற லாம். அதேபோன்று கேணல் தர அதிகாரி கப்பற்படை கப்டன், விமானப்படை கப்டன் ஆகி யோர்55 வயது வரை பணி யாற்றலாம். அதிகூடிய கட்டாய சேவை அடிப்படையில் அது லெப்டினன்ட் ஒருவருக்கு ஆறு வருடமாகவும் கப்டன் ஒரு வருக்கு 11 வருடமாகவும் மேஜர் ஒருவருக்கு பத்து வருட மாகவும் லெப்.கேணலுக்கு எட்டு வருடமாகவும் கேணல் ஒருவருக்கு ஐந்து வருட மாகவும் கணிக்கப்படுகிறது.

இவர்களுக்கு சேவை நீடிப்பை அதற்கென அமைக்கப் பட்ட சபையின் சிபார்சுடன் சனாதிபதி வழங்குவார். அந்தச் சபையில் தலைவர், பாதுகாப்பு செயலர் ஆவதுடன் பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர், குறிப்பிட்ட படை அதிகாரி ஆகியோர் அங்கத்த வர்களாவர். குற்றச்சாட்டு களுக்குட்படாது சேவையாற்றி யமை, சிறந்த நடத்தைகள் என்ப வற்றின் அடிப்படையிலேயே ஒருவரின் சேவை நீடிப்பு அல்லது பதவியுயர்வு கவனத் தில் எடுக்கப்படும். அத்துடன் சபையின் சிபார்சும் முக்கியமான தாகும். இவை யாவும் கடந்த செவ்வாய்க்கிழமை வரை கடைப்பிடித்து வந்தவையாகும்.

எனினும் தற்போது மேற்படி சேவை நீடிப்பு, பதவியுயர்வு போன்றவற்றை நடைமுறைப் படுத்த முதல் மேற்படி அதிகாரி தகைமையுள்ளவரா என்பதை ஆராயும் பொறுப்பு தற்போது அமைச்சரவையிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. அந்த அமைச் சிலும் விசேடமாக இராணுவத் துறை சார்ந்த ஓய்வுபெற்ற அதிகாரிகளே அவ ்ருக்குப் பொறுப்பாக இருப் ,கவே ஒருவரது தகைமை, ியின் மை பற்றி அவர் புரிந்து கொள்வார்.

எனினும் பாதுகாப்பு அமைச் சில் அங்கம் வகிக்கும் இவ்வதி காரிகள் அரசியல் ரீதியாக அத்துறைக்கு பொருத்த மில்லாத வெளியார் தலையீடு அல்லாத வகையில் செயற்படு வார் என்பதில் சந்தேகமே. அவ்வாறெனில் எதிர்காலத்தில் இராணுவத்தினரை அரசியல் மயமாக்குவதற்கு எடுக்கப்படும் துரித மார்க்கமாகும்.

இதனால் ஆளும் கட்சி ஆதரவாளராக இருக்கும் அவ்வாறான அதிகாரி ஒரு வரை அதே கட்சி ஆதரவாளர் ஒருவர் தனக்கு வேண்டிய உறவினர் ஒருவரையோ, நண் பனையோ பதவியுயர்த்துமாறு அல்லது சேவை நீடிப்பு வழங்கு மாறு அழுத்தம் கொடுக்கலாம். அதுமட்டுமன்றி ஏனைய அமைச்சர்களது விருப்பு, வெறுப்புகளுக்கேற்பவும் அவர் நடந்து கொள்ளவும் சுயமாக செயலாற்ற முடியாத படியும் இருக்க நேரிடும். இந்த முறை நாடு சுதந்திரமடைந்து 57 வருடங்கள் வரை கடைப் பிடித்து வரும் இராணுவக் கொள்கைகளுக்கு முரணா கிறது.

ஒரு இராணுவத்தளபதி சிபார்சு செய்த பின்னர் அவரை யொத்த வேறொருவர் இதில் உடன்படுவதற்கான தேவை யென்ன? புதிய நடைமுறை இராணுவத்திலும் நாட்டின் பாதுகாப்பிலும் பாரிய தீய விளைவுகளையே ஏற்படுத்தும்.

இந்த நாட்டு இராணுவத்தில் பலவேறுபட்ட கருத்துள்ள அணிகள் உள்ளன. ஒரு சில அரசியல் பலத்தையும் பெற்றுள் ளன. அவர்களின் செல்வாக்கு ஒருவர் பதவியுயர்வையோ, சேவை நீடிப்பையோ விரும்பும் போது செயற்படுத்தப்படுகிறது. அப்போது அவர்கள் பல உயர் அரசியல்வாதிகளிடம் உதவி கோருவர். இதன் காரணமாக முப்படைகளிடமும் அதிகாரப் போட்டி உருவாகாதா? தனது அதிகாரத்தின் கீழ் உள்ள ஒரு அதிகாரியின் பதவியுயர்வு சேவை நீடிப்பு தொடர்பில் தனது அதிகாரம் வேறொரு சபையின் அதிகாரத்திற்கு கட்டுப்படாதா? நாட்டின் இறைமை, ஐக்கியம் என்பவற்றைப் பாதுகாக்கும் படைவீரர்கள் போன்ற உயர்ந்த தொரு நிறுவனம் அழிந்துவிடும் அச்சம் சந்திரிகாவின் புதிய நடைமுறையினால் தோன்றி யிருக்கிறது.

மேலும் ஒரு விடயம் இங்கு குறிப்பிட வேண்டும். அது பாது காப்புச் சபையின் தலைவர் அச்சபையில் இணைத்துக் கொள்ளப்படுவதாகும். ஒரு கட்டத்தைத் தவிர இதுவரை தொடர்ந்து அப்பதவியி லிருப்பவர் ஓய்வுபெற்ற இராணுவத்தளபதிகளாவர். கடந்த 25 ஆம் திகதி வரை அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கடமை நிறைவேற்றப்பட்டு வந்தது. அத்துடன் தற்போது பாதுகாப்புச் சபைக்கு கட்டளை யிடும் அதிகாரம் வழங்கப்பட் டுள்ளது. அதன்படி அவர் களுக்கு பதவியுயர்வு வழங்கு வது யாரைச் சேவை நீடிப்பில் வைத்திருப்பது என்று தீர்மா னிக்கும் அதிகாரம் அவர் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியாக இருப்பதனாலாகும். இதனால் எதிர்காலத்தில் இராணுவ உயரதிகாரிகளின் நோக்கம் நிறைவேற்ற முடியாமல் போகிறது. அத்துடன் தனக்குக் கீழ் சேவையாற்றிய கீழ்மட்ட அதிகாரிகளுக்கு அளிக்கப் படாத சலுகைகள், உரிமைகள் மீண்டும் கிடைக்காமல் போகும். இதனால் ஒரு இராணுவ வீரர் தொடர்ந்தும் அதே பதவியி லிருக்க வேண்டிய நிலையேற் படுகிறது. இந்தநிலை ஏற்படக் காரணம் முப்படைகளினதும் பொறுப்பாளர் என்ற வகையில் தனககு வழங்கப்பட்ட அதிகாரத் தினால் கடந்த 25 ஆம் திகதி இராணுவத் தரப்பில் சந்திரிகா ஏற்படுத்திய திடீர் மாற்ற மாகும்.

இதன்படி இராணுவத் தளபதி லெப். கேணல் சாந்த கொட்டேகொட சேவை நீடிப் பைப் பெற்றுள்ளார். அவர் அந்தப் பதவியை 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி பொறுப்பேற்றார். அவரின் சேவைக்காலம் 2004 நவம்பர் மாதம் ஆகும். அப்போது அவர் 55 வயதைப் பூர்த்தி செய்தார். அவருக்குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட தால் அவர் மேலும் இந்த ஆண்டு வரை பதவியிலிருப் பார்.

ஆயினும் சந்திரிகாவின் புதிய அறிவித்தலின்படி அவர் மேலும் நான்கு வருடம் சேவை யிலிருப்பார். அதேபோல இராணுவத்தின் ஆளணிக்குப் பொறுப்பாகவுள்ள கிருஷ்ண ரத்ன சரத் பொன்சேகா, சுசில் சந்ரபால ஆகியோர் 2008 வரையும் கடற்படையதிகாரி வசந்த கரன்னகொட 2012 வரையும் பதவியிலிருப்பர். எனினும் 14 வருடம் சேவை யிலிருந்து தற்போது லீவில் சென்றிருக்கும் றியல் அட்மிரல் மோகன் விஜேரத்னவின் சேவை நீடிப்புப்பற்றி கவனத்தில் எடுக்கப்படவில்லை. அவர் இம்மாதம் 24 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார். அதே போன்று விமானப் படையதிகாரி டொனால்ட் பெரேரா 2010 ஆம் ஆண்டுவரை பதவியி லிருக்கும் வாய்ப்பு கிட்டி யுள்ளது. இதைவிட கடந்த மாதங்களில் ஓய்வுபெற்ற வர்களுக்கும் மீண்டும் சேவை யிலீடுபடுத்தும் சந்தர்ப்பம் தற்போது ஏற்படுத்தப் பட்டுள்ளது.

எனினும் இந்த நடைமுறை அமுலுக்கு வருவதால் இராணு வத்தில் தற்போது கீழ்மட்டத் திலிருக்கும் 13 அதிகாரிகள் பதவியுயர்வு பெறும் சந்தர்ப்பம் இல்லாமல் போயுள்ளது. திடீரென அமுலாக்கப்பட்ட இந்த மாற்றத்தினால் இளநிலை அதிகாரிகள் பெரிதும் விசன மடைந்திருக்கின்றனர். அவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடுமையான சேவையாற்றிய வர்களாவர். எதிர்பாராத- முன்னறிவித்தலின்றி சனாதிபதி இந்த மாற்றத்தை ஏற்படுத் தியிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தை பலமான தாக மாற்றுவதெனக் கூறிக் கொண்டு இவ்வாறு செய்யப் பட்டுள்ளது. கடந்த ஐ.தே. முன்னணி அரசு காலத்தில் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இராணுவத்தின் ஓய்வு பெறும் வயது தீர்மானிக் கப்படும் எனத் தெரிவித்தார். எனினும் சந்திரிகா அமைச் சுக்களை கைப்பற்றியதும் அந்தக் குழு பற்றி கவனத்தில் எடுக்கப்படவில்லை.

சநதிரிகா முப்படை களினதும் ஆலோசனைகளைப் பெற்றே புதிய மாற்றத்தை ஏற்படுத்தி

**இக்பால் அத்தாஸ் (சண்டே ரைம்ஸ்) தமிழில் – வடிவேல்**

யுள்ளார். இந்த அறிவித்தல் நாடு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும் நிலையில் அறிவிக்கப் பட்டுள்ளது. அதாவது வரும் 17 ஆம் திகதி நடைபெறும் சனாதிபதித் தேர்தல், அதனை யடுத்து புலிகளின் மாவீரர் தினத்தில் தலைவர் பிரபாகரன் அவர்கள் வெளியிடவிருக்கும் கருத்துப் பிரகடனம், தற்போது வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடை பெறும் பொங்கு தமிழ், தமிழர் களின் எழுச்சி மாநாடு நடை பெற்று வருதல் என்பன நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டு விடுமா என்ற நிலையிலாகும்.

எனவே இந்த இராணுவ உயர் அதிகாரிகளின் சேவை நீடிப்பு விவகாரம் இராணு வத்தை பலமிழக்கச் செய்யும் ஒன்றாகவே கருதப்படும்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

யா/பரு/4402 திரு. பொன்னுச்சாமி நாகலிங்கம்.
யா/பரு/4431 திரு.சிதம்பரப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/பரு/4438 திரு.சிதம்பரப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/பரு/4444 திரு. தாமோதரம் காசிநாதர்.
யா/பரு/4462 திரு. சபாரத்தினம் சுப்பிரமணியம்.
யா/பரு/4488 திரு.தருமலிங்கம் கணேசலிங்கம்.
யா/பரு/4494 திரு. கந்தையா மயில்வாகனம்.
யா/பரு/4495 திரு.விசுவலிங்கம் சிவலிங்கராசா.
யா/பரு/4497 திரு.பொன்னுச்சாமி செல்லத்துரை
யா/பரு/4540 திருமதி.தங்கமணி மீனாட்சிசுந்தரம்
யா/பரு/4598 திருமதி.நல்லம்மா கிருஷ்ணபிள்ளை
யா/பரு/4617 திரு. பொன்னர் சின்னராசா.
யா/பரு/4620 திரு. குட்டியன் சின்னையா.
யா/பரு/4624 திருமதி.தங்கபாக்கியம் இராமலிங்கம்
யா/பரு/4625 திருமதி. தெய்வி பூசிங்கம்.
யா/பரு/4637திருமதி. மாணிக்கம் சின்னையா.
யா/பரு/4642 திரு. சுப்பர் தர்மலிங்கம்.
யா/பரு/4647 திரு. சுப்பிரமணியம் அழகேசன்.
யா/பரு/4651 திரு. கதிர்காமு செல்வவிநாயகம்.
யா/பரு/4671 திருமதி.தெய்வானை தில்லையம்பலம்
யா/பரு/4688 திருமதி.சீவரத்தினம் பாலசுப்பிரமணியம்
யா/பரு/4705 திரு.வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை
யா/பரு/4710 திருமதி. சின்னம்மா கந்தசாமி.
யா/பரு/4714 திருமதி. ஈஸ்வரி வேலுப்பிள்ளை.
யா/பரு/4737 திரு. சுப்பர் இராசையா.
யா/பரு/4779 திருமதி. கமலாதேவி பாலசூரியர்.
யா/பரு/4783 திருமதி.சிசிலியம்மா இராஜநாயகம்
யா/பரு/ 4785 திரு.சிதம்பரநாதன் ஆறுமுகநாதன்
யா/பரு/4788 திரு.வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/பரு/4794 திருமதி. சரஸ்வதி வடிவேலு.
யா/பரு/4861 திரு.மயில்வாகனம் சிறிஸ்கந்தராசா.
யா/பரு/4869 திருமதி.அர்த்தோனிக்கம்மா அல்பிரேட்
யா/பரு/4873 திரு.வீரகத்தி அப்பாக்குட்டி.
யா/பரு/4881 திரு.வைரப்பிள்ளை செல்வராசா.
யா/பரு/4913 திரு.சிமயானந்தகுரு சிவயோககுரு
யா/பரு/4934 திரு.சின்னையா கந்தசாமி.
யா/பரு/4961 திருமதி.நாகரத்தினம் மகேந்திரன்.
யா/பரு/4982 திருமதி. தங்கமணி செல்வராசா.
யா/பரு/5005 திருமதி.அழகம்மா கணபதிப்பிள்ளை
யா/பரு/ 5006 திரு. சபாபதி நடராசா.
யா/பரு/5013 திருமதி.வள்ளிமுத்து தேவசிகாமணி
யா/பரு/5017 திருமதி. புவனேஸ்வரி சபாரத்தினம்
யா/பரு/5021 திரு.சபாதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி.
யா/பரு/5024 திரு. கந்தையா பாலகிருஷ்ணன்.
யா/பரு/5037 திருமதி.அகிலநாயகி பாலசிங்கம்
யா/பரு/5044 திரு. சிவராமலிங்கம் சோமசேகரம்
யா/பரு/5117 திருமதி.தெய்வானைப்பிள்ளை கந்தசாமி
யா/பரு/5126 திருமதி.பாலாம்பிகை இரத்தினசபாபதி
யா/பரு/5129 திருமதி. சின்னாச்சி சிதம்பரன்.
யா/பரு/5171 திருமதி.முத்துப்பிள்ளை கந்தசாமி
யா/பரு/5182 திருமதி.கண்மணி சிவக்கொழுந்து
யா/பரு/5213 திருமதி. இராசம்மா சந்திரசேகரம்.
யா/பரு/ 5230 திரு. அகஸ்ரீன் அமிர்தநாதர்.
யா/பரு/ 5261 திரு.சோமசுந்தரம் சுப்பிரமணியம்.
யா/பரு/5270 திரு. கதிரேசு சட்டநாதர்.
யா/பரு/5279 திருமதி. தங்கம்மா வேலாயுதம்.
யா/பரு/5288 திருமதி.இராசபூபதி வைத்திலிங்கம்
யா/பரு/5348 திருமதி.சரஸ்வதிதேவி நல்லையா
யா/பரு/5413 திரு.சுப்பிரமணியம் செந்தில்வேல்நேசன்
யா/பரு/5417 திரு.சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்
யா/பரு/5418 திரு.பழனியாண்டி முத்துலிங்கசாமி
யா/பரு/5467 திருமதி.புஷ்பமதி சிவப்பிரகாசம்.
யா/பரு/5515 திரு. மாணிக்கவாசகர் கனகராசா.
யா/பரு/5522 திரு.இளையதம்பி சிவராசசிங்கம்
யா/பரு/5575 திருமதி.ஜானகியம்மா சுந்தரசிவா.
யா/பரு/5578 திருமதி.அன்னம்மா நடராசசிங்கம்.
யா/பரு/5611 திரு. வேலன் குணரத்தினம்.
யா/பரு/5635 திருமதி.பரமேஸ்வரி இளையதம்பி
யா/பரு/5652 திரு.சின்னையா கணபதிப்பிள்ளை
யா/பரு/5666 திரு. இரத்தினம் மகாலிங்கம்.
யா/பரு/5687 திருமதி.தெய்வானைப்பிள்ளை முருகேசு
யா/பரு/5702 திருமதி. கனகம்மா ஞானசேகரம்.
யா/பரு/5707 திரு.முருகுப்பிள்ளை சிவலிங்கம்.
யா/பரு/ 5742 திரு.நடராசா தங்கவேலாயுதம்.
யா/பரு/5755 திருமதி.தங்கரத்தினம் தங்கவேலாயுதம்
யா/பரு/5757 திரு. அருணாசலம் நல்லதம்பி
யா/பரு/ 5764 திரு. கந்தசாமி சோமசேகரம்.
யா/பரு/ 5776 திருமதி.செல்வமணி இரத்தினவேலாயுதம்
யா/பரு/5778 திரு. கந்தசாமி பொன்னம்பலம்.
யா/பரு/5851 திரு.கிறிஸ்தக்கோன் யக்கோப்பிள்ளை
யா/பரு/5884 திரு.செல்லையா கதிர்காமத்தம்பி.
யா/பரு/5903 திரு. கதிரவேலு பாலசிங்கம்.
யா/பரு/5911 திருமதி.பாறுபதி வீரகத்திப்பிள்ளை.
யா/பரு/5932 திருமதி.ராஜ்ஜோதியம்மா அகிலநாதன்
யா/பரு/6002 திரு.சபாரத்தினம் வேலாயுதபிள்ளை
யா/பரு/6057 திருமதி.உருக்குமணி செல்வராஜா
யா/பரு/6089 திருமதி. உலகநாயகி நடராசா.
யா/பரு/6104 திருமதி. பராசக்தி தியாகராசா.
யா/பரு/6189 திரு.முருகேசுசுப்பிரமணியம் கந்தசாமி
யா/பரு/6191 திரு.கந்தவனம் சிதம்பரநாதன்.
யா/பரு/6206 திருமதி.சின்னத்தங்கம் சின்னையா
யா/பரு/6221 திரு. தங்கராஜா தங்கவேலாயுதம்.
யா/பரு/6253 திருமதி. தங்கராணி தர்மதாஸ்.
யா/பரு/6310திரு.கந்தவனம் கிருஷ்ணபிள்ளை.
யா/பரு/6313திரு. வீரகத்தி வடிவேலு.
யா/பரு/6330 திரு.மயில்வாகனம் சோமசுந்தரம்.
யா/பரு/6352 திரு.தங்கராசா அருச்சுனலிங்கம்.
யா/பரு/6424 திருமதி.சரோஜா சிவசோதி
யா/பரு/6461 திரு.வல்லிபுரம் வேலாயுதம்.
யா/பரு/6497 திரு.சிதம்பரம் குணத்திலிங்கம்.
யா/பரு/6501 திரு.சின்னத்தம்பி மகேசன்.
யா/பரு/6514 திரு.இராசரத்தினம் இரத்தினகோபால்
யா/பரு/6573 திருமதி.நாகேஸ்வரி சிவராஜசிங்கம்
யா/பரு/6635 திருமதி.தேவசிறோன்மணி முத்துராசா
யா/பரு/6655 திருமதி.மனோன்மணி கிருஷ்ணபிள்ளை
யா/பரு/6701 திரு.பாலசிங்கம் லிங்கமூர்த்தி.
யா/பரு/6718 திருமதி. பத்மாதேவி சோதிகலாபம்.
யா/பரு/6742 திருமதி. மகேஸ்வரி குலசேகரம்.
யா/பரு/6783 திரு. சங்கரப்பிள்ளை செல்வராசா.
யா/பரு/6799 திரு. செல்லத்துரை ஆறுமுகசாமி.
யா/பரு/6815திரு.வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன்
யா/பரு/6835 திரு.முத்தையா யோண்குணநாயகம்

## வவுனியா மாவட்டம்

வ/வ/4திரு. சின்னத்துரை தனபாலசிங்கம்
வ/வ/8திரு.சவரிமுத்து அன்ரன் இம்மனுவேல்
வ/வ/ 9திரு.விக்கினேஸ்வரா லோகேஸ்வரன்
வ/வ/10திரு. ஐயாத்துரை நகுலேந்திரன்.
வ/வ/14திரு. சிற்றம்பலம் கந்தசாமி.
வ/வ/15திரு. சண்முகநாதன் சிவானந்தம்
வ/வ/18திரு. ஐயாத்துரை ரவீந்திரன்.
வ/வ/21திரு. நடராசா தேவராசா.
வ/வ/23திரு. நடராசா புலேந்திரன்.
வ/வ/26 திரு. வைத்திலிங்கம் ஜெயபாலகிருஷ்ணன
வ/வ/27திரு. விநாயகர் செல்லத்துரை.
வ/வ/30திரு.கணபதிப்பிள்ளை நாகேந்திரராசா
வ/வ/32திரு.நாராயணசாமி இராமசாமிநாயுடு
வ/வ/ 37திரு. ஐயாத்துரை மகேந்திரன்.
வ/வ/38திரு. நாகமுத்து இலட்சுமிகாந்தன்.
வ/வ/40திருமதி.புவனேஸ்வரி சிவஞானசேகரம்
வ/வ/41திரு. தம்பையா சுந்தரலிங்கம்.
வ/வ/47திரு.கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
வ/வ/48திரு. சுந்தரம் பரந்தாமன்.
வ/வ/49திருமதி. சிவமதி தர்மராசா.
வ/வ/52திரு.பொன்னையா ஆனந்தநடராசா
வ/வ/55திருமதி. சரஸ்வதி நாகேசு.
வ/வ/ 56திரு. இராசையா தேவராசா.
வ/வ/57திரு. பொன்னையா செம்பலிங்கம்.
வ/வ/58திரு. செல்லையா தியாகராசா.
வ/வ/60திரு. துரையப்பா குலசிங்கம்.
வ/வ/63திரு. தில்லையம்பலம் கந்தசாமி.
வ/வ/67திரு. காத்திகேசு இராசலிங்கம்.
வ/வ/68திரு. வேலுப்பிள்ளை சீவரத்தினம்.
வ/வ/69திரு. செல்லத்துரை ஸ்ரீநிவாசகம்.
வ/வ/ 75திரு. செல்லத்துரை பரமசாமி.
வ/வ/76திருமதி. சாந்தினிதேவி சத்தியமூர்த்தி.
வ/வ/82திரு. வைரமுத்து சிவசுப்பிரமணியம்.
வ/வ/ 83திரு. கனகசபை குலசிங்கம்.
வ/வ/87திரு. சிதம்பரம் இராசு.
வ/வ/90திரு. சவரிமுத்து பத்தியாஜெயபாலன்
வ/வ/ 92திருமதி. அன்னலட்சுமி பஞ்சாட்சரம்.
வ/வ/94திரு. சம்புநாதன் சபாரத்தினம்.
வ/வ/96திரு. சின்னத்தம்பி சிவகுமார்.
வ/வ/99திரு. சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி.
வ/வ/102திரு. இரத்தினம் தங்கராசா.
வ/வ/103திரு. சண்முகம் சிவராசா.
வ/வ/109திரு. பொன்னுத்துரை சிவஞானசுந்தரம்.
வ/வ/110திரு. ஆறுமுகம் கோடீஸ்வரன்.
வ/வ/111திரு. சின்னத்தம்பி பாலசுந்தரம்.
வ/வ/114திரு. அண்ணாமலை செல்வராசா
வ/வ/120திரு. மயில்வாகனம் குணலட்சுமணன்.
வ/வ/123திரு. செல்லையா பேரானந்தம்.
வ/வ/131திரு.தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம்
வ/வ/137திரு. மாரிமுத்து தர்மலிங்கம்.
வ/வ/141திருமதி. ஜெயலட்சுமி பரமநாதன்.
வ/வ/145திரு. பொன்னுத்துரை அமிர்தலிங்கம்.
வ/வ/148திருமதி. அன்னபூரணம் குணலிங்கம்.
வ/வ/153திருமதி. செல்லம்மா நல்லையா.
வ/வ/154திருமதி. குணசூரி அருளானந்தம்.
வ/வ/156திரு. சுப்பையா பொன்னுத்துரை.
வ/வ/160திரு. சுப்பிரமணியம் குமாரராசா.
வ/வ/161திரு. சுந்தரம்பிள்ளை யோகராசா.
வ/வ/167திரு. சின்னப்பொடி திருஞானசம்பந்தமூர்த்தி
வ/வ/168திரு. வயிரவிப்பிள்ளை திருநாவுக்கரசு.
வ/வ/169திரு. நாகலிங்கம் சந்திரலிங்கம்.
வ/வ/174திரு.செல்லத்துரை மதுரை (அரசரத்தினம்)
வ/வ/175திரு.சுப்பிரமணியம் திருஞானசம்பந்தமூர்த்தி
வ/வ/176திரு. தம்பிராசா திருஞானசம்பந்தன்.
வ/வ/178திருமதி. தவராணி பாலசுப்பிரமணியம்.
வ/வ/180திரு. கனகசபை சிவசேகரம்.
வ/வ/183திரு. கந்தசாமி சிவசுப்பிரமணியம்.
வ/வ/185திருமதி. யோகேஸ்வரி ஜெவாத்தனா.
வ/வ/186திரு. சுப்பையா இரத்தினசிங்கம்.
வ/வ/189திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்.
வ/வ/191திரு. மயில்வாகனம் சுப்பிரமணியம்.
வ/வ/196திரு. சுப்பிரமணியம் நவரத்தினராசா.
வ/வ/198திரு. மாணிக்கம் கிருஷ்ணர்.
வ/வ/199திரு.சங்கரப்பிள்ளை மாணிக்கவாசகர்.
வ/வ/200திரு. சங்கரப்பிள்ளை மகாலிங்கம்.
வ/வ/205திரு. நாகலிங்கம் லிங்கோபன்.
வ/வ/209திரு. வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்.
வ/வ/212திரு. செல்லையா சுந்தரம்பிள்ளை
வ/வ/215திருமதி. பரமேஸ்வரி யோகநாதன்.
வ/வ/ 218திரு. "இராமசாமி சிவனேஸ்வரன்.
வ/வ/ 219திரு. கணபதிப்பிள்ளை குணசிங்கம்.
வ/வ/220திரு. நல்லதம்பி மயில்வாகனம்.
வ/வ/223திருமதி. சிவபாக்கியம் தியாகராஜா.
வ/வ/224திரு. நாகலிங்கம் ஐயாத்துரை
வ/வ/226திரு. தில்லையம்பலம் குலராஜசிங்கம்.
வ/வ/229திரு. ஐயாத்துரை தர்மலிங்கம்.
வ/வ/ 230திருமதி. சரஸ்வதி முத்துக்கிருஷ்ணன்
வ/வ/232திரு. இராசதுரை லிங்கேஸ்வரன்.
வ/வ/234திரு. தம்பிராசா செல்வராசா.
வ/வ/235திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்.
வ/வ/239திரு. இராமநாதர் பஞ்சலிங்கம்.
வ/வ/242திருமதி. யோகேஸ்வரி சிறிதரன்.
வ/வ/245திரு. முத்தையா சிவஞானசுந்தரம்.
வ/வ/246திரு. பேரம்பலம் செல்வரத்தினம்.
வ/வ/247திரு. வைத்திலிங்கம் பாலச்சந்திரன்.
வ/வ/248திரு. நல்லலிங்கம் கணேசலிங்கம்.
வ/வ/250திரு. பொன்னையா சிவசுப்பிரமணியம்.
வ/வ/252திரு. சண்முகம் வேலாயுதம்.
வ/வ/253திரு. காசிப்பிள்ளை நாகராசா.
வ/வ/254திரு. அரியகுட்டி பாலகிருஷ்ணன்.
வ/வ/255திரு. நாகமுத்து இராசேந்திரம்.
வ/வ/256திரு. நடராசா தெய்வேந்திரராசா.
வ/வ/257திருமதி. பூலோகபாக்கியம் வல்லிபுரம்.
வ/வ/258திரு. நடராசா செல்லத்துரை.
வ/வ/ 259திரு. விணாசித்தம்பி சிவசுப்பிரமணியம்.
வ/வ/261திரு. கந்தையா சண்முகராஜா.
வ/வ/262திருமதி.பாக்கியலட்சுமி விநாயகமூர்த்தி
வ/வ/263திரு. சுந்தரம்பிள்ளை மகேந்திரராசா.
வ/வ/ 264திரு. அருளம்பலம் நாகேந்திரன்.
வ/வ/266திரு. குலசேகரம் ஸ்ரீஆனந்தன்.
வ/வ/268திரு. முத்தையா கணேசமூர்த்தி.
வ/வ/269திரு. ஆறுமுகம் இராசேந்திரம்.
வ/வ/270திரு. மயில்வாகனம் செல்வராசா.
வ/வ/271திரு. கந்தையா தம்பிராசா.
வ/வ/272திரு. சிதம்பரப்பிள்ளை குலராசசிங்கம்.
வ/வ/274திரு. சங்கரப்பிள்ளை கமலேஸ்வரன்.
வ/வ/ 275திரு. செல்லையா கிருஷ்ணபிள்ளை.
வ/வ/283திரு. செல்லத்துரை நவரத்தினம்.
வ/வ/285திருமதி.குகனேஸ்வரி பாலசுப்பிரமணியம்
வ/வ/ 286திரு. செல்லத்துரை விஸ்வநாதன்.
வ/வ/290திரு. விநாயகர் லோகராசா.
வ/வ/293திரு. கதிரவேலு பற்குணம்.
வ/வ/295திரு. விநாயகர் சிவசிதம்பரம்.
வ/வ/303திரு. சுப்பிரமணியம் இராசதுரை.
வ/வ/304திரு. குமாரஐயா நாகநாதன்.
வ/வ/305திருமதி. அன்னலட்சுமி செல்வராசா.
வ/வ/306திரு. மனுவேற்பிள்ளை நாகலிங்கம்.
வ/வ/310திரு. வெள்ளாந்துரை இராமலிங்கம்.
வ/வ/311திரு. குழந்தைவேலு பாலச்சந்திரன்.
வ/வ/319திரு. கார்த்திகேசு செல்வலிங்கம்.
வ/வ/323திரு. சிதம்பரப்பிள்ளை செல்வசுந்தரம்.
வ/வ/324திரு. இராசையா பாலசுந்தரம்.
வ/வ/326திரு. நாகமுத்து பாலசுப்பிரமணியம்.
வ/வ/328திரு.தில்லையம்பலம் கிருஸ்ணேஷ்வரன்
வ/வ/330திருமதி.வசந்தகுமாரி உமாமகேஸ்வரதாசன்
வ/வ/ 331திரு. குமாரசாமி பன்னீர்செல்வம்.
வ/வ/332திரு. இளையதம்பி தருமபாலன்.
வ/வ/333திரு. நல்லதம்பி குலசிங்கம்.
வ/வ/335திரு. நடராசசிங்கம் விமலராசா.
வ/வ/336திரு. கார்த்திகேசு இரத்தினம்
வ/வ/337திரு. சுப்பிரமணியம் மகேந்திரராசா.
வ/வ/341திரு. சரவணமுத்து அருளானந்தம்.
வ/வ/346திரு. செல்லத்தம்பி பரமானந்தம்.
வ/வ/348திரு. நல்லதுரை வரதராசா.
வ/வ/350திரு. தருமலிங்கம் தருமரத்தினம்.
வ/வ/352திரு. குமரேசு கெங்காதரன்.
வ/வ/ 354திரு.கணவதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
வ/வ/357திரு.முத்துக்குமாரு பாலச்சந்திரன்.
வ/வ/358திரு. திருவம்பலம் யோகராசா.
வ/வ/362திரு. பரமநாதன் இராஜசேகரம்.
வ/வ/364திரு. கார்த்திகேசு குணலிங்கம்.
வ/வ/365திரு. தம்பிராசா தியாகராசா.
வ/வ/368திரு. தம்பிராசா சொர்ணலிங்கம்.
வ/வ/369திரு. செல்லத்துரை மார்க்கண்டு.
வ/வ/372திரு. கணபதிப்பிள்ளை கயிலைநாதன்.
வ/வ/373திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்.
வ/வ/378திரு. சிவகுரு சிவசுப்பிரமணியம்.
வ/வ/383திரு. சவரிமுத்து தருமராசா.
வ/வ/386திரு. சிதம்பரப்பிள்ளை தியாகராசா.
வ/வ/388திரு. சின்னத்துரை சிவபாதம்.
வ/வ/389திரு. சிதம்பரப்பிள்ளை யோகராசா.
வ/வ/393திரு. நாகலிங்கம் சிவகணேசன்.
வ/வ/397திரு. முத்தையா தங்கராசா.
வ/வ/399திரு. சின்னையா சிவராசா.
வ/வ/403திரு. பூபாலசிங்கம் பாலசிங்கம்.
வ/வ/405திரு. பரமசாமி சிவானந்தராசா.
வ/வ/406திரு. சிதம்பரப்பிள்ளை அற்புதராசா.
வ/வ/407திரு. சின்னப்பொடி சிவசுப்பரமணியம்.
வ/வ/411திரு. ஆறுமுகம் அமிர்தலிங்கம்.
வ/வ/413திரு. இராமநாதன் மகேஸ்வரன்.
வ/வ/415திரு. தம்பாப்பிள்ளை தருமரத்தினம்.
வ/வ/ 416திரு. நாகலிங்கம் நடராசா.
வ/வ/417திரு. சரவணமுத்து தனபாலசிங்கம்.
வ/வ/418திரு. கனகசபை தேவராசா.
வ/வ/420திரு. சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்
வ/வ/422திரு. முருகப்பர் துரைராசா.
வ/வ/423திரு. பொன்னுத்துரை மனோகரசிங்கம்.
வ/வ/432திரு. சின்னக்குட்டி பூபாலசிங்கம்.
வ/வ/440திரு. இராமலிங்கம் மாணிக்கவாசகர்.
வ/வ/443திரு. இரத்தினம் தர்மு.
வ/வ/447திரு. இராமு கணேசன்.
வ/வ/448திருமதி.தையல்நாயகி நவரத்தினராசா.
வ/வ/452திரு. ஜெயமணி ஜெபநேசர்.
வ/வ/456திரு. தம்பையா கதிர்காமநாதன்.
வ/வ/458திரு. சின்னத்தம்பி மயில்வாகனம்.
வ/வ/460திரு. கந்தையா முருகையா.
வ/வ/464திரு. துரைச்சாமி சித்திரவேல்.
வ/வ/465திரு. மாசிலாமணி நடராசா.
வ/வ/469திரு. செல்லையா தளையசிங்கம்.
வ/வ/473திரு. சிதம்பரப்பிள்ளை சின்னராசா.
வ/வ/476திரு. வீரையா இராசேஸ்வரன்.
வ/வ/482திரு. தியாகராசா இலட்சுமிகாந்தன்.
வ/வ/483திரு. கனகசபை அமிர்தலிங்கம்.
வ/வ/484திரு. ஏகாம்பரம் சேதுபதி.
வ/வ/487திரு. சின்னத்தம்பி பாலசிங்கம்.
வ/வ/489திரு. பெருமாள்பிள்ளை பரமசிவம்.
வ/வ/490திரு.சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை.
வ/வ/491திரு. திருஞானம் ரவிராசா.
வ/வ/492திரு. நடராசா தர்மலிங்கம்.
வ/வ/494திரு. எம் நடராசன்.
வ/வ/495திரு. செல்லத்துரை பவளசேனன்.
வ/வ/500திரு. கந்தையா இராசலிங்கம்.
வ/வ/501திரு. சிவபாதசுந்தரம் ஞானசம்பந்தர்.
வ/வ/502திரு. அழகசாமி இராமசுவாமி.
வ/வ/504திரு.வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்
வ/வ/505திரு. செல்வம் இராமச்சந்திரன்.
வ/வ/506திரு.தியாகநாகலிங்கம் கணேசலிங்கம்.
வ/வ/509திரு. கந்தையா நடராசா.
வ/வ/510திருமதி. பூமணி தில்லைநடராசா.
வ/வ/513திரு. சண்முகநாதன் குகனேஸ்வரன்.
வ/வ/516திரு. சண்முகநாதன் தேவராசா.
வ/வ/517திருமதி.ஹூர்த்துவசந்தா அமிர்தலிங்கம்
வ/வ/520திரு. அருளம்பலம் குலசேகரம்.
வ/வ/ 521திரு. வேலாயுதம் ஜெகநாதபிள்ளை.
வ/வ/ 523திரு. கனகரட்ணம் மல்லிகராசா.
வ/வ/524திரு. சிங்கராயர் ஜெயராஜா.
வ/வ/526திரு. விநாயகமூர்த்தி குகானந்தராஜா.
வ/வ/ 528திரு. கதிரவேலு தனபாலசிங்கம்.
வ/வ/529திரு.கணவதிப்பிள்ளை இரத்தினசிங்கம்
வ/வ/532திரு. அருணாசலம் சந்திரசேகரம்.
வ/வ/533திருமதி. நிர்மலாதேவி விஷயகுமார்.
வ/வ/534திருமதி. ஸ்ரீரஞ்சினி நமோகுமாரய.
வ/வ/536திரு. நல்லையா ஞானசுந்தரம்.
வ/வ/537திரு. அண்ணாமலை கிருஷ்ணசாமி.
வ/வ/538திரு. சின்னத்தம்பி தியாகராசா
வ/வ/539திரு.ஆறுமுகம் தெய்வேந்திரம்பிள்ளை.
வ/வ/541திரு. சேனாதிராசா நடேசபிள்ளை.
வ/வ/542திரு. சுப்பிரமணியம் செல்வநாயகம்.
வ/வ/543திரு. வீரவாகு ஞானப்பிரகாசம்.
வ/வ/545திருமதி. சிவமணி ஞானப்பிரகாசம்.
வ/வ/546திரு. செல்லையா கனகசபை.
வ/வ/548திரு. விநாசி இராசதுரை.
வ/வ/550திரு. முத்துச்சாமி நடராசா.
வ/வ/551திரு. ஆறுமுகம் நாகேந்திரன்.
வ/வ/552திரு. ஸ்ரீகண்டு சண்முகநாதன்.
வ/வ/ 554திருமதி. புனிதவதி மகாலிங்கம்.
வ/வ/555திரு. வைத்தி கோபாலசிங்கம்.
வ/வ/556திரு. சிவகுரு கணேசமூர்த்தி.
வ/வ/558திரு. மணியம் நடராசா.
வ/வ/559திரு. மயில்வாகனம் அமிர்தலிங்கம்.
வ/வ/560திரு. கந்தையா சிதம்பரநாதன்.
வ/வ/562திரு. முருகேசு தவராசா.
வ/வ/ 563திருமதி. அன்னபூரணம் இந்திரராஜா.
வ/வ/564திரு. இராசையா கிருஷ்ணானந்தன்.
வ/வ/567திரு. நல்லையா சுப்பிரமணியம்.
வ/வ/568திரு. சண்முகம் பாலசிங்கம்.
வ/வ/570திரு. குமாராத்தை செல்வராசா.
வ/வ/571திரு. குருநாதபிள்ளை நாகராசா.
வ/வ/573திரு. முத்துச்சாமி மகேந்திரன்.
வ/வ/575திரு. பேதுரு செல்வநாயகம்.
வ/வ/576திரு.சிதம்பரப்பிள்ளை அமிர்தலிங்கம்.
வ/வ/580திரு. சுப்பிரமணியம் செல்வராசா.
வ/வ/581திரு. நாகமணி யோகராசா.
வ/வ/583திரு. பாலசிங்கம் வேலுப்பிள்ளை.
வ/வ/584திரு. சுந்தரம்பிள்ளை இராஜன்.
வ/வ/586 திரு.அந்தோனிப்பிள்ளைஇம்மனுவலயோசெப்
வ/வ/590திரு. சின்னத்தம்பி கந்தசாமி.
வ/வ/592திரு. வேலாயுதம் புண்ணியம்.
வ/வ/593திருமதி.லில்லிபுளோறா நடேசமூர்த்தி.
வ/வ/596திரு. சண்முகம் திருச்செல்வம்.
வ/வ/597திரு. கனகலிங்கம் மகேந்திரன்.
வ/வ/598திரு. அருளானந்தம் தர்மராஜா.
வ/வ/599திரு. ஏகாம்பரம் சிவலிங்கம்.
வ/வ/601திரு.பழனியாண்டிப்பிள்ளை முருகராஜ்.
வ/வ/605திரு. கதிரவேலு பாலசிங்கம்.
வ/வ/608திரு. முடியப்பு அருள்நாதன்.
வ/வ/609திரு. கதிரவேலு மகேந்திரராசா.
வ/வ/611திரு. நல்லதம்பி துரைசிங்கம்.
வ/வ/612திரு. துரைராசா சாந்தகுமார்.
வ/வ/614திரு. சந்தேயினர் விமலநாதன்.
வ/வ/615திரு. சிவசிதம்பரம் சந்திரசேகரம்.

(தொடரும்...)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு.செ. அல்பிரட்
அதிபர்

திரு.ஆ. குணரேசன்
பிரதி அதிபர்

முல்லை மகாவித்தியாலயத்தில் முதல்வராகி,
முதுகலைமாணிப்பட்டம் பெற்ற
எம் அதிபர் அல்பிரட் அவர்களையும்
'குணம்' என்னும் நாமம் பெற்று
முல்லை வலயத்தில் நல்லாசான் விருது பெற்ற
பிரதி அதிபர் குணரேசன் அவர்களையும்
குதூகலமாய் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்,
சக ஆசிரியர்கள், ஊழியர்கள்
மு/முல்லைத்தீவு ம.வி.
முல்லைத்தீவு.

(6640).


# ரணில்விக்கிரமசிங்கவுக்கு குண்டு துளைக்காத கூண்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி சனாதிபதி வேட்பாளர் ரணில்விக்கிரமசிங்கவுக்கும் குண்டு துளைக்காத கூண்டுப்பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ரணில்விக்கிரமசிங்கவின் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதாக பாதுகாப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளதையடுத்து கடந்தவெள்ளிக்கிழமை முதல் குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டினை ரணில் பயன்படுத்துகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் குண்டு துளைக்காத கூண்டிலிருந்து அவர் உரையாற்றினார். பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ரணிலுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து அவருக்கு தெரிவித்திருந்தார். ரணில் கலந்துகொள்ளும் கூட்டங்களைக் குறைத்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டிருந்தார்.

இதுவரை மூன்று பாதுகாப்புக் கூண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை பாதுகாப்புப் படையினரின் ஆலோசனைகளுக்கமையத் தேவையான இடங்களில் பயன்படுத்தப்படும்.

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத வாக்குப்பதிவு இருக்காது

## – பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் பொழுது, வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்தப்படும் வாக்குப் பதிவுகளில் சட்ட விரோதமான முறையில் செயற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்துள்ளார்.

வாக்குச் சாவடிகளில் சட்ட விரோதமான முறையில் வாக்குப்பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு.

ஏனெனில் வாக்குச்சாவடிகள் பல கண்காணிப்புக் குழுக்களினால் நுணுக்கமாக கண்காணிக்கப்படும். ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்புக் குழுவினர், ஆசிய கண்காணிப்பு அமைப்பு மற்றும் பவ்ரல் போன்ற அமைப்புக்கள் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதனையும் மீறி தேர்தல் சட்டத்திற்கு எதிராக வாக்குப் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், தேர்தல்கள் ஆணையாளருக்கு குறிப்பிட்ட வாக்குச் சாவடிகளின் வாக்குப்பதிவுகளை இரத்து செய்து விட்டு மீள் தேர்தலுக்கு உத்தரவிட அதிகாரமுள்ளது. ஆகவே இது குறித்து அதிகம் கவலை கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்தார். (32)

# ரிஸ்வி மீடினின் கொலையில் சிறிலங்கா அமைச்சருக்கும் தொடர்பு

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி ரிஸ்வி மீடினின் கொலையுடன் பிரதி அமைச்சர் ஒருவருக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருப்பதாகத் கொழும்பில் வெளியாகும் வார இறுதி நாளேடொன்று தெரிவிக்கின்றது.

அத்துடன் கடந்த பொதுத்தேர்தலின் போது ஜே.வி.பி யுடன் இணைந்து செயற்பட்ட கம்பஹா பிரதேச துறவி ஒருவர் மீதும் சந்தேகம் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தக் காவித்துறவி தற்போது தலைமறைவாகி இருப்பதாகவும் தெரியவருகிறது. ரிஸ்வி மீடினின் கொலை சம்பந்தமாக மீன் வியாபாரியான சம்லி என்பவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொரு சந்தேக நபரான ஜஸ் மஞ்சு என்பவர் தேடப்பட்டு வருகின்றனர்.

# தேர்தல் கண்காணிப்பில் 5000 பிரதிநிதிகள்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் பொழுது தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் மையத்தினால் ஐயாயிரம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், 30 உள்ளூர் கண்காணிப்பாளர்கள் சேவைக்கு அமர்த்தப்படும் அதேவேளை, வட மாகாணத்தில் பத்து வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# வாக்கு மோசடியில் ஈடுபடுவோரை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது வாக்கு மோசடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மோசடிகளில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கான ஆலோசனைகளை தேர்தல் ஆணையாளர் பொலிசாருக்கு வழங்கியுள்ளார்.

தேர்தல் வாக்களிப்பின்போது வயது குறைந்தோர் வந்தால் அவர்களை விசாரணை செய்யவும் தேர்தல் ஆணையாளர் பொலிசாருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

# புதிய தூதுவர் நியமனம்

பிரித்தானிய அரசு சிறிலங்காவிற்கு புதிய தூதுவரை நியமித்துள்ளது. டொமினிக்கில் கொட் என்பவரே பிரிட்டனின் சிறிலங்காவிற்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது தூதுவராக இருக்கும் ஸ்ரீபன் ஈவன்ஸ் வேறு இராஜதந்திர பதவிக்கு மாற்றப்பட்டுள்ளார். புதிய தூதுவர் ஐரோப்பிய ஆபிரிக்க நாடுகளில் பணி புரிந்தவர். ஈராக்கிய திட்டமிடல் செயலகப் பணிப்பாளராகவும் அவர் பணி புரிந்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரிட்டனிற்கான பிரதிநிதியாக நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.


solidar
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Schweizerisches Arbeiterhilfswerk SAH
Norwegian People's Aid

An INGO consortium including NPA, SAH and ASB

The Solidar Group an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB sri lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding six villages in the North-East in the district of Jaffna as part of its Phase III Post-Tsunami Reconstruction & Rehabilitation Plan. Solidar is now looking to fill the following Positions to assist in the socio-economic mobilization and community development activities.

**MICROFINANCE EXPERT**

A highly qualified person is required to develop a sustainable system for microfinance to support livelihood activities and income generation projects based on the village level planning. General duties will be:

- Taking the lead in the planning, implementation and management of the microfinance component
- Directly liaise with partner organizations, such as CBOs, local NGOs, and with the established banking sector.
- Capacity building and the development of a training program with relevance to microfinance activities.

A proven track record of working with local communities in the North-East is essential, as is an ability to speak fluent Tamil and English language.

**SMALL AND MEDIUM ENTERPRISE (SME) DEVELOPMENT EXPERT**

An experienced and innovative person is required to develop home based industries, local micro enterprises as well as to support the establishment of new enterprises. The general duties comprise:

- Program development jointly with the communities and beneficiaries
- Close cooperation with the microfinance expert to ensure sustainable livelihood support
- Development and management of a training and capacity building Component.

In-depth knowledge in the areas of private enterprise and cooperative development, fishery, processing & marketing of food products and gender enterprise development is sought. Experience of working with local communities in the North-East is essential, as is an ability to speak fluent Tamil and English language.

**COMMUNITY DEVELOPMENT OFFICERS**

Experienced personnel are required to help with the implementation and monitoring of Solidar's community development, livelihood support and capacity building activities. Main tasks will be:

- Day-to-day liaison with and awareness raising and support of community/village-based groups
- Monitoring of and reporting on project progress
- Establishing and maintaining contacts with government authorities and local NGOs, and INGOs, Experience in the areas of fishing, agriculture, sustainable livelihoods, small& medium enterprise development, microfinance and gender is sought. Candidates must demonstrate excellent communicaton skills with beneficiaries through proven track record of working with local communities in the North-East and the ability to speak fluent Tamil language.

Please send your CV and application letter to karin.voigt@sah.ch by 20th of November 2005:

Alternatively please mail to:

Ifaza Marikkar
Solidar-Office
2 Jawattr Ave
Colombo 05

or

Dr. Karin Voigt
Solidar-Office
156 Jaffna Road
Paranthan-Kilinochchi.

(சி-13302)



தமிழீழப் போக்குவரவுக் கழகம்
நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

மழைகாரணமாக 05.11.2005 ஆம் நாள் நடைபெற்ற நேர்காணலிற்கு வருகை தராதவர்கள் 12.11.2005 ஆம் நாள் சனி காலை 09.00 மணிக்கு விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனைக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-13310)

# நட்வர்சிங் விவகாரம் தொடர்பாய் சோனியா, மன்மோகன் பேச்சு

(புதுடில்லி)

வோல்கர் விசாரணைக் குழுவின் குற்றச்சாட்டால் எழுந்த சர்ச்சைக்குப் பின் இரண்டாவது முறையாக பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து சோனியா காந்தி ஆலோசனை நடத்தினார்.

ஈராக்கில் அமுல்படுத்தப்பட்ட எண்ணைக்கு உணவுத் திட்டத்தில் இலஞ்சம் பெற்றதாக வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் மீது வோல்கர் விசாரணைக்குழு குற்றம் சாட்டியது. இதனால் அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என பா.ஜ. போர்க் கொடி தூக்கியது. இப்பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஏற்கனவே ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில் நட்வர்சிங்கை பதவியில் இருந்து நீக்குவது குறித்து சனாதிபதியிடம் வலியுறுத்தப் போவதாக தேஜ. கூட்டணியினர் தீர்மானித்துள்ளனர். இதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக சந்தித்து சோனியா ஆலோசனை நடத்தினார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் வரும் 23 ஆம் திகதி தொடங்குவதற்கு முன் மத்திய அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. இந்த சூழ்நிலையில், பிரதமருடன் சோனியாகாந்தி நடத்திய ஆலோசனை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1982 | 2004 |
| - | - |
| 11 | 10 |
| - | - |
| 04 | 20 |

### திருமதி அனுஷா (நித்தியா)

### திதி – 07.11.2005

ஓராண்டு அல்ல நூறு ஆண்டுகள்
கடந்தாலும் உன் கவலை தீராதம்மா.

*உன்பிரிவால் துயருறும்*

கணவர்- து.பத்மநாதன், பிள்ளைகள் டெலீனா,பிரவீனா, அண்ணா,அண்ணி, தங்கை,மச்சான், அத்தைமார்,மாமன்மார், பெரியப்பா, பெரியம்மா, சித்திமார், சித்தப்பாமார்,

(சி-13311)

தாய், தந்தை,
இ. இராசதுரை,
மணியங்குளம்,
கந்தபுரம்.

மாமா,மாமி
உ. தங்கவேல்,
நத்தோட்ட,
மாத்தளை.

தகவல்:-
க.இராசதுரை(தந்தை)
அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்
அக்கராயன்குளம்.

## சாவு அறிவித்தல்



### யாக்கோப்பு ஜெயராசா (ஜெயம்)

கரவெட்டியைப்பிறப்பிடமாகவும் இல. 385, இராமநாதபுரத்தில் வசித்த வரும் இல.20 கல்மடு பத்து ஏக்கரை வதிவிடமாகக் கொண்டவருமாகிய யாக்கோப்பு ஜெயராசா (ஜெயம்) என்று செல்லமாக அழைக்கப்படுபவர் 05.11.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற யாக்கோப்பு தங்கம்மாவின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், காலம்சென்ற சிங்கராயர் யுஸ்ரீனா ஆகியோரின் அன்பு மருமகனும், இராமநாதபுர மகாவித்தியாலய மாணவர்களான யூட் நிரோஜன், யூடினா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறில், மணி ஜெயவதி, யோகம், யோகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவராசா சோதி, நிர்மலன், நவம், குமுதினி, யோசப்பின் ஜெயராசா, ராகினி ஜெயம், அன்ரன், ராகினி,பொன்ராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனையுடன் 07.11.2005 (திங்கட்கிழமை இன்று) காலை பத்து மணிக்கு இராமநாதபுரம் சேமக் காலையில் நல்லடக்கம்செய்யப்படும். இவ்வறிவித்தலை. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத் தருகிறோம்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

(6911)

# நிவாரணம் பெற திரண்ட மக்களின் நெரிசலில் சிக்கி ஆறு பெண்கள் பலி!

## - சென்னையில் துயரம்

(சென்னை)

தமிழகம் சென்னைமாநகரில் கடந்த இருவாரங்களாக இடையிட்டு பெய்த பலத்த மழை காரணமாக நகரின் பெரும்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டாயிரம்ரூபா நிவாரணம் வழங்க தமிழக அரசு அறிவித்ததையடுத்து நிவாரணப் பொருட்களைப் பெறக் கூடிய மக்களின் நெரிசலில் சிக்கி ஆறு பெண்கள் பரிதாபகரமாக பலியானார்கள். நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது;

சென்னை நகரில் சில பகுதிகளுக்கு நேற்று முன்தினம் நிவாரணம் வழங்கும் பணி இரவு பத்து மணிக்கு நிறுத்தப்பட்டது. அப்போதும் ஆயிரக்கணக்கானோர் அங்கு கூடி நின்றார்கள் நேற்றுக்காலை முதல் ஆளாகச்சென்றுநிவாரணத்தைப் பெற்றுவிடவேண்டும் என்பதற்காக அவர்கள் வீட்டுக்கு கூடச்செல்லாமல் அங்கேயே இருந்தனர்.

இரவு செல்லச்செல்லகூட்டம் அதிகரித்து கொண்டே இருந்தது. நேற்று அதிகாலை மூன்று மணி அளவில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் அங்கு திரண்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் கல்லூரி ஒன்றின் வளாகத்துக்கு வெளியே நின்றிருந்தனர். மூன்று மணியளவில் கல்லூரி வாசலை வலுக்கட்டாயமாகத் திறந்து உள்ளே சென்றனர். இதனால் முன்கூட்டியே இடத்தை பிடிப்பதற்காக அங்கு கூடி இருந்தவர்களிடம் பரபரப்பு ஏற்பட்டது.ஒருவரை ஒருவர் முந்தியபடி அத்தனை பேரும் ஒரே நேரத்தில் உள்ளே நுழைந்து ஓடியதால் நெரிசல் ஏற்பட்டது.

ஆண்களும் பெண்களும் முண்டியடித்து ஓடிய போதுஒருவர் மீது ஒருவர் இடித்து கீழே விழுந்தனர். அவர்



கள் மீதுஇடறிமற்றவர்களும் கீழேவிழுந்தனர். ஆனாலும் இடம் பிடிக்கும் நோக்கத்தில் கீழே விழுந்தவர்களைக் கண்டு கொள்ளாமல் மிதித்துக் கொண்டு ஓடினார்கள். கல்லூரி வளாகத்திற்குள் ஆங்காங்கே குட்டை போல மழைநீர் தேங்கிநின்றது. அதற்குள்ளும் சிலர் விழுந்து மூழ்கினார்கள். நெரிசலில் மிதிபட்டும் தண்ணீரில் மூழ்கியும் ஆறு பெண்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் நடந்தது. பற்றி அறிந்ததும் கூடுதல் பொலிசாரும் தீயணைப்புப் படையினரும் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் காயமடைந்தவர்களை மீட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பலியான ஆறு பேர்களின் உடல்களும் ஸ்டான்லி மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைக்கப்பட்டுள்ளது.

# நட்வர்சிங்கைப் புழிவாங்கத் துடிக்கும் மூன்று காங்கிரஸ் பிரமுகர்கள்

(புதுடில்லி)

உணவுக்கு எண்ணை திட்டத்தில் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய இந்திய மத்திய மந்திரி நட்வர்சிங்குக்கு முதலில் காங்கிரஸ் ஆதரவு அளிக்கவில்லை. இந்த விவகாரத்தை நட்வர்சிங்தான் தீர்க்கவேண்டும் என்ற ரீதியில் காங்கிரஸ் தரப்பில் இருந்து கருத்து வெளியிடப்பட்டது.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் பெயரும் இந்த விவகாரத்தில் சிக்கிய பின் நட்வர்சிங்குக்கு முழு ஆதரவு அளிக்க வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கும், காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

கம்யூனிஸ்டு கட்சிகள் தான் முதலில் நட்வர்சிங் மத்திய மந்திரி பதவியில் இருந்து விலகத்தேவை இல்லை என்று பகிரங்கமாக அறிவித்தது. ஆனால் காங்கிரஸ் தரப்பில் இருந்து இதுவரை அப்படி எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

இதற்கு மூன்று காங்கிரஸ் தலைவர்கள் நட்வர்சிங்குக்கு எதிராக இருப்பதே காரணம் என்பது தெரியவந்துள்ளது. மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் அகில இந்திய பொதுச் செயலாளர் அம்பிகா சோனி, டில்லி மேல்சபை காங்கிரஸ் எம்.பி. ஜெய்ராம், ரமேஷ் ஆகிய மூவரும் நட்வர்சிங்குக்கு எதிராக செயற்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அவரை மந்திரி பதவியில் இருந்து விரட்டவும் அவர்கள் முடிவு செய்திருந்ததாகக் கூறப்படுகிறது. சதாம் ஹுசேனை நட்வர்சிங் சந்திக்க ஏற்பாடு செய்த ஈராக் வாழ் இந்திய தொழில் அதிபர் மெஜ்சியின் முகவரியையும் பத்திரிகையாளர்களுக்கு இவர்கள்தான் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் மூவரும் நட்வர்சிங் மீது இத்தனை வெறுப்பு இருப்பதற்கு காரணம் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் முன்பு சோனியா முழுவதுமாக நட்வர்சிங்கை நம்பினார். அந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இவர்களை சோனியாவின் அருகில் செல்லக்கூட நட்வர்சிங் அனுமதிக்கவில்லை. அதற்கு பழிவாங்கவே மூன்று பேரும் நட்வர்சிங்கிற்கு எதிராக செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

## இந்திய மத்திய அமைச்சர் ஜெய்பிரகாஷ் பதவி விலகினார்

(புதுடில்லி)

மத்திய நீர்வளத்துறை இணை அமைச்சர் ஜெய்பிரகாஷ் நாராயண் நேற்று முன்தினம் ராஜினாமா செய்தார். இவர் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்தவர். இவர் தனது தம்பியை பொலிஸ் காவலிலிருந்து தப்பிச்செல்ல உதவிய குற்றச்சாட்டில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## முல்லை ஆங்கில சிறுவர் பாடசாலை

## பணிநிலை வெற்றிடம்

ஆசிரியர்கள் :- மேற்படி பாடசாலையில் 3-5 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஆங்கிலம் கற்பித்தல்

தகைமை :- க.பொ.த.[சா/த] ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் [C] க.பொ.த. [உ/த] 3 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

நேர்முகத்தேர்வு:- 20.11.2005 [ஞாயிறு] காலை 10.00 மணி

இடம் :- ஆங்கில முன்பள்ளி,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

அ.கா.மகாலிங்கம்
தலைவர்

(6912)

# வீடியோகான் ஒரு நாள் தொடர்; சிறிலங்கா அணிக்கு ஆறுதல் வெற்றி



இந்தியா-சிறிலங்கா அணிகளுக்கிடையிலான வீடியோகான் ஒரு நாள் போட்டித் தொடரில் சிறிலங்கா அணி முதலாவது வெற்றியைப் பெற்று ஆறுதலடைந்துள்ளது. அகமதாபாத்தில் நேற்றுப் பகலிரவாக நடைபெற்ற ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் ஐந்து விக்கெட்டுக் களால் இந்தியாவை வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணி இந்திய அணியை துடுப்பாடப் பணித்தது. முதலில் ஆடிய இந்தியா 69 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்தபோதும் அணித் தலைவர் ராவிட், காம்பீர் ஆகியோரின் அபார சதத்தின் உதவியுடன் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது. ராவிட் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களையும், காம்பீர் 102 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மஹ்ரூப் நான்கு விக்கெட்டுக்களையும், சொய்சா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா அணியின் விக்கெட்டுக்கள் சம இடை வெளியில் வீழ்ந்தபோதும் டில்சான், ஆனல்ட் இணையின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 48 ஓவரில் வெற்றியிலக்கை அடைந்தது. டில்சான் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களையும், ஆனல்ட் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் பெற்றனர். சிறப்பாட்டக்காரராக டில்சன் தெரிவானார்.




# இங்கிலாந்து அணி தடுமாற்றம்



பாகிஸ்தானுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அந் நாட்டின் முதல் தர அணியுடனேயே தடுமாறி வருகிறது. நேற்று ஆரம்பமான நான்கு நாள் போட்டியில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. முகமட் அசீப் ஏழு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் ஏ அணி ஆட்ட நேர முடிவில் 127 ஓட்டங்களுக்கு எட்டு விக்கெட்டை இழந்தது. கொக்காட் நான்கு விக்கெட்டுக்களையும், ஹைஸ் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பிறிஸ்பேன் டெஸ்ட்

# அவுஸ். பந்து வீச்சாளர்கள் அபாரம் மே.தீவுக்கு மோசமான தோல்வி





பிறிஸ்பேனில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவு-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 379 ஓட்டங்களால அபார வெற்றி பெற்றுள்ளது.

509 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் நான்காவது நாளான நேற்று இரண்டாவது இனிங்சை தொடர்ந்த மேற்கிந்தியத்தீவு ஒரு கத்துக்குட்டி அணி போன்று 129 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் முதல் இனிங்சில் மெக்ராத், ஷேன் வோர்ன் ஆதிக்கம் செலுத்த, இரண்டாவது இனிங்சில் பிரெட்லி, பிரேக்கன் ஆகியோர் மேற்கிந்திய வீரர்களை கதிகலங்க வைத்தனர். பிரெட்லி ஐந்து விக்கெட்டுக்களையும், பிறேக்கன் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். எஞ்சிய ஒரு விக்கெட்டை அட்சன் கைப்பற்றினார். துடுப்பாட்டத்தில் ஹைறல் 33, சர்வான் 31 ஓட்டங்களை அதிகூடிய ஓட்டங்களாகப் பெற்றனர். அவுஸ்திரேலியா முதல் இனிங்சில் 435 ஓட்டம், இரண்டாவது இனிங்ஸ் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 283 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்தியது. மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்ஸ் 210, இரண்டாவது இனிங்ஸ் 129 ஓட்டம்.



ஐரோப்பாவில் நடை பெறும் பிரிமியர் ஷிப் கால்பந்துப் போட்டியில் நேற்றுமுன்தினம்ஆர்சனல்–சண்டர்லானட் அணிகளிற் கிடையில் நடைபெற்றபோட்டியில் ஆர்சனல் வீரர் விகன் கோல் அடிப்பதை படத்தில் காணலாம். இப்போட்டியில் ஆர்சனல் 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# 2007 உலகக்கிண்ண கிரிக்கெட்; இந்திய அணி வெற்றிபெறும்

*கருத்துக் கணிப்பு தெரிவிப்பு*




இந்திய கிரிக்கெட் அணி அடுத்த உலகக் கோப்பையை வெல்லும் என்று கருத்துக் கணிப்பு தகவல் தெரிவிக்கிறது.

தற்போதைய இந்திய கிரிக்கெட் அணி அடுத்த (2007) உலகக் கோப்பை போட்டியில் வெல்லுமா? ராவிட் தலைவராக நீடிப்பது நல்லதா? டெண்டுல்கர் வருகையால் நன்மையா? பயிற்சியாளர் சப்பல் மீதான நம்பிக்கை உட்பட பல் வேறு அம்சங்கள் குறித்து ஆஜ் தக் மற்றும் ஏ.சி நீல்சன் ஆகியவை கருத்துக் கணிப்பு நடத்தியுள்ளன.

இது குறித்து டில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், லக்னோ, ஐதராபாத் ஆகிய எட்டு நகரங்களில் வசிக்கும் 2000 பேரிடம் கருத்துக் கேட்கப்பட்டது.

இதில் தற்போதைய இந்திய அணி அடுத்த உலகக் கோப்பையை வெல்லும்திறன் கொண்டது என்று 85 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர். உலகக் கோப்பை போட்டிக்கு இந்திய அணிக்குத் தலைவராக இருக்க ராவிட் சிறந்தவர் என்று 72 சதவீதம் பேர் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். 15 சதவீதம் பேர் கங்குலிக்கும், நான்கு சதவீதம் பேர் சேவாக்குக்கும் ஆதரவாகவும் கருத்து கூறியுள்ளனர்.

# இந்திய அணிக்கு இனி வானமே எல்லை




இந்திய அணியின் அசுர வளர்ச்சி பிரமிப்பூட்டுகிறது. ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய இவர்கள் கோப்பையை எளிதாக தட்டிச் சென்றனர். எந்த ஒரு கட்டத்திலும் பதற்றம் அடையாதது தான் சிறப்பம்சம். இளமையும் அனுபவமும் கலந்த வலிமைமிக்க அணியாக காட்சி அளிக்கிறது. தன்னம்பிக்கையும் பன்மடங்கு அதிகரித்து விட்டதால் இனி இந்திய அணிக்கு வானமே எல்லை. என்கிறார் முத்தையா முரளிதரன் இலங்கையைப் பொறுத்தவரை திறமைக்கேற்ப விளையாடவில்லை. வெற்றியும் தோல்வியும் சகஜம் என்பது வீரர்களுக்கு நன்கு தெரியும். கடந்த மூன்று ஆண்டுகளாக வெற்றிகரமான அணியாக வலம் வந்தோம். பூனே போட்டியில் கூட வெற்றியை நெருங்கினோம். ஆனால் ராவிட் கொடுத்த அடித்தளத்தை டோனி. ரெய்ணா சரியாக பயன்படுத்த வாய்ப்பு நழுவியது. எங்களது பந்துவீச்சாளர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதால் வரும் போட்டிகளில் நிச்சயம் திருப்புமுனை ஏற்படுத்துவார்கள் எனவும் முரளிதரன் தெரிவித்தார்.




# சீன ஒலிம்பிக் போட்டி சின்னம் 11ஆம் திகதி வெளியிடப்படும்

சீனாவில் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டிக்கான சின்னம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

2008 ஒலிம்பிக் போட்டிகள் சீனத் தலைநகரான பீஜிங்கில் நடக்கவுள்ளது அப்போட்டிக்கான அதிகாரபூர்வ சின்னமாக பாண்டா கரடி தேர்வு செய்யப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

அதேபோல் "ஒரு உலகம், ஒரு கனவு" என்ற போட்டிக்கான வாசகமும் வெளியிடப்படவுள்ளது.இதற்கான விழாவில் சர்வதேச ஒலிம்பிக் சபை நிர்வாகிகள் உட்பட நான்காயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# டெஸ்ட் போட்டி போன்று ஒருநாள் போட்டியிலும் ஆடுவேன்

*சேவாக்*

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடுவது போல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் சிறப்பாக ஆட முயற்சிப்பேன் என்று சேவாக் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரராக விளங்கி வருபவர் வீரேந்தர் சேவாக். இவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார் அப்போது அவர் கூறியதாவது;

ஒருநாள் போட்டியை பொறுத்தவரையில் நீண்ட நேரம் களத்தில் நின்று ஆடினாலே போதும். அதற்கு ஏற்றாற்போல் ஓட்டம் வந்து விடும். டெஸ்ட் போட்டியில் சிறப்பாக ஆடுவது போல் இனி ஒருநாள் போட்டியிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன்.

ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டம்குவிக்க முடியவில்லை என்பதற்காக வருத்தப்படவில்லை. எனது பணியைச் சிறப்பாகவே செய்து வருகிறேன். மற்ற வீரர்களும் தங்களது பணியைச் சிறப்பாகச் செய்தாலே போதும் அணி வெற்றி பெற்றுவிடும் என்றார்.



துணிந்த பின் மனமே துயரம் கொள்ளாதே. இந்திய அணியில் இருந்து ஓரம் கட்டப்பட்டுள்ள கங்குலி நேற்று மும்பை விளையாட்டரங்கில் துலீப் கோப்பை போட்டியின் போது 14 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தபின் ஓய்வாக அமர்ந்திருக்கிறார். சோகம் அவர் முகத்தில் குடி கொண்டிருக்கிறது.

# உலக குத்துச் சண்டைப் போட்டி ஸ்கொட் ஹரிசன் சம்பியன்



கிளஸ்கவ்வில் நடைபெற்ற உலக குத்துச் சண்டை சங்கக் கிண்ணத்துக்கான போட்டியில் அவுஸ்திரேலியாவின் வெற்றிபெற முடியாத வீரராகக் கருதப்படும் நெட்ல ஹுசைனை ஸ்கொட் ஹரிசன் ஒரு புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்று தனது எட்டாவது வெற்றியைப் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் ஹரிசனின் கரம் முதலில் ஓங்கியிருந்த போதும், இடையில் ஹுசைன் விட்ட குத்தினால் சற்று பின்வாங்கினார். எனினும் மனதை திடப்படுத்திக்கொண்டு போராடி இறுதியில் வெற்றிபெற்றார்.

இந்த வெற்றி தொடர்பாக அவர் கூறும்போது; போட்டிக்கு முன் சற்று அச்சமிருந்ததாகவும் தன்னைவிட பலமுள்ளவராக இருந்ததாகவும் தெரிவித்ததுடன் இருவருக்குமிடையில் கடும் போட்டி நடைபெற்றதாகவும் தெரிவித்தார்.




மகேபு நகரில் கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் ஆண்களுக்கான 57 கிலோ டேக்வான்டோ பிரிவில் தென் கொரிய வீரர் லீ சியுங்கா (இடது), தைவான் வீரர் செங்பெய்வா மீது ஆக்ரோஷமாக உதைகிறார். இந்தப் போட்டியில் லீ தங்கம் வென்றார்.



## சிந்தனைக்கு

இந்த உலகில் அநீதியும்- அடிமைத் தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப்போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 07.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## மகிந்தவின் கரிசனை

பலாலி படைத்தளத்திற்கும் - காங்கேசன்துறைக்கும் விஜயம் மேற்கொண்ட சிறிலங்காவின் பிரதமரும், சனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ இதுவரை சிங்களத் தலைவர்கள் எவருமே தமிழ் மக்கள் மீது காட்டாத அளவிற்குக் கரிசனை காட்டியுள்ளார். தேர்தலில் தான் போட்டியிடுவதே தமிழ் மக்களுக்காகத்தான் என்பதாக அவரது பேச்சினது அர்த்தம் இருந்தது.

இதுவரையில் சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களாக இருந்த அனைவருமே "நான் பதவிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேன்" எனப் பேசுவதே வழமையானதாகும். ஆனால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ அதற்கும் மேலாகச் சென்று "நான் தேர்தலில் போட்டியிடுவதே தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத்தான்" எனக்கூறியுள்ளார்.

" தமிழர்களின் அமைதிக்கான, சனநாயகத்திற்கான குரல் ஒலிக்க முடியாத அளவிற்கு துப்பாக்கிச் சத்தம் மேலோங்கி இருக்கின்றது. துப்பாக்கிச் சத்தத்தினால் அடிமைப்பட்டிருக்கும், மூழ்கடிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள்குரல் எழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகவே எதிர்வரும் 18 ஆம் திகதி நான் சனாதிபதியாகப் பதவி ஏற்பேன்"என்பதே மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்குத் தெரிவித்துள்ள கருத்தாகும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிகள் அனைத்துமே தங்களைவிட எவருமே சிந்திப்பதில்லை, பகுத்தறிந்து பார்ப்பதில்லை என்ற எண்ணத்தைக்கொண்டவர்களாகவுள்ளனர். இதன் காரணமாக புதிய தேர்தல் வாக்குறுதிகள் மூலம் கடந்தகால அரசியல் வரலாற்றையே மாற்றி விட முனைகின்றார்.

அதாவது தமிழரின் வரலாறும், யதார்த்தமுமே தமிழ் மக்களின் சனநாயக உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள் யாரால் மறுக்கப்படுகின்றன, நசுக்கப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தப் போதுமானவையாகும். இதனைத் தவிர தற்பொழுது தமிழர் தாயகப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ளமையும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், உரிமைகளுக்கும் மாறாகச் செயற்படுபவர்கள் யார் என்பதும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகிற்கே தெரிந்ததொன்றே.

அதாவது தமிழ் மக்களை அச்சுறுத்தி அவர்களின் நிலங்களையும் வீடுகளையும் ஆக்கிரமித்துள்ளதோடு ஆயுதமுனையில் அவர்களின் மனித, சனநாயக உரிமைகளையும் சிறிலங்கா அரசே நசுக்கியும் வருகின்றது. இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ தமிழர்களை ஆயுதமுனையில் இருந்து விடுவிப்பது எனப் பேசியிருப்பது நகைப்பிற்கிடமானதாகவே உள்ளது.

ஆனால், தமிழ் மக்களை விடுவிக்கப் போவதாகவும் சனநாயக உரிமைகளை வழங்கப்போவதாகவும் கூறும்முதலாவது சிங்களத் தலைவரல்ல மகிந்தராஜக்ஷ. அதாவது இக்கருத்தை முதலில் கூறியவர் மகிந்த ராஜபக்ஷவல்ல. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுத ரீதியில் நசுக்க முயன்ற சகல சிங்களத் தலைவர்களும் இதனையே கூறினர். குறிப்பாக சிறிலங்காவின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிலிருந்து தனது ஆட்சிக்காலத்தின் இறுதிக்காலத்தை எண்ணிக்கொண்டிருக்கும் சனாதிபதி சந்திரிகா வரையில் இதனையே கூறினார்கள்.

அதாவது சிங்கள ஆட்சியாளரின் ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் போராட ஆயுதம் தூக்கியபோது அதனைப் பயங்கரவாதம் எனக்கூறிய சிங்கள ஆட்சியாளர்கள் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். இதற்கென அரசின் சகல வளங்களும், வசதிகளும் பயன்படுத்தப்பட்டன. படுகொலைகள், சித்திரவதை என்பனவற்றைச் சட்டபூர்வமானதாக்குவதற்கு ஏற்றவகையில் சட்டங்களும் இயற்றப்பட்டன.

ஆரம்பத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது பின்னர் தமிழ் மக்களை விடுவிப்பதற்கான போர் என மாற்றம் கண்டது. தனது முதலாவது பதவிக்காலத்தின்போது தமிழர் தாயகத்தின்மீது பெரும் படையெடுப்புக்களை நடாத்திய சனாதிபதி சந்திரிகா அப்படையெடுப்புக்களை நியாயப்படுத்த சமாதானத்திற்கான போர் என அதனை அறிவித்தார்.

இத்தகையதொரு நிலையில் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவோ அடக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் குரல் ஒலிக்க வழிசெய்யப்போவதாகவும் அதற்காகவே தான் தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்துள்ளார். அதாவது , சனாதிபதி சந்திரிகா அரசு தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்காக ஒரு யுத்தத்தை நடத்தியது. அதேபோன்று மகிந்த ராஜபக்ஷவும் தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காக தேர்தல் ஒன்றில் போட்டியிட வேண்டியதாகிவிட்டது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களை விடுவிக்க என்ன வழிகளைக் கையாளப் போகின்றார் என்பதை தெளிவுபடுத்தவில்லையாயினும், யுத்தத்தைத் தவிர அவருக்கு இதற்கு வேறுவழியிருப்பதாக இல்லை. ஆகையினால் 17ஆம் திகதி தேர்தலில் மகிந்த வெற்றி பெற்று சனாதிபதியாக வருவாரேயானால் யுத்தம் ஒன்றை எதிர்பார்க்க முடியும். இதற்கு மகிந்த ராஜபக்ஷவை ஒருவகையில் பாராட்டினும் பொருந்தும். ஏனெனில் அவர் தனது மனக்கிடக்கையை தெரிவித்து விட்டமைக்காகும்.

# பொய் கூறி ஆட்சிபீடம் ஏறுவதைவிட உண்மை கூறி எதிரணியில் இருப்போம்

**-ஐ.தே.க.பா.உ. ஜீ.எல். பீரிஸ்**

(கொழும்பு)

"பொய் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறுவதை விட உண்மைகளைக் கூறி எதிர்க்கட்சி இருக்கைகளில் இருப்பது மேலானது" இதுவே எமது கட்சித் தலைவரின் கொள்கையாகும் என முன்னாள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் நிவித்திகல, பெல்மதுளை ஆகிய நகரங்களில் இடம்பெற்றுள்ளன. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகளில் எந்த பொய் வாக்குறுதிகளும் இல்லை. எம்மால் முடியுமானதை மட்டுமே செய்வோம். அதையே நாம் சொல்வோம்.

"மகிந்தவின் சிந்தனைகள்" என்று வெளியிடப்பட்ட பிரகடனத்தில் முழுக்க முழுக்க பொய்களே நிறைந்துள்ளன. அதுவும் 2004ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பொதுத் தேர்தல் பிரகடனங்களையே தூசி தட்டி மீண்டும் மகிந்தவின் சிந்தனை ஆக்கியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறிய தீவான இலங்கைக்குள் இன்னொரு தனிநாடு சாத்தியமில்லையாம்

**- மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்**

(கொழும்பு)

சிறிய தீவான இலங்கைக்குள் இன்னொரு தனிநாடு என்பது சாத்தியமில்லை என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தெல்தெனிய மற்றும் கெலிஓயா பகுதிகளில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் மகிந்த ராஜபக்ஷ பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் கீழ் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் அமைதியான இலங்கையை எம்மால் உருவாக்க முடியும். இதை நாம் சவாலாகவே சொல்லுகிறோம்.

நாம் அமைதிமுயற்சிகளில் ஈடுபாட்டுடன் உள்ளோம். நாடு பிளவுபடாமல் கௌரவமான அமைதியை உருவாக்குவோம். நாம் யுத்தத்துக்கு தயாராவதாக பொய் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின் றன.

ஒழுங்கமைவான, நாகரிகமான சமூகத்தைக் கட்டியெழுப்ப எம்முடன் மக்கள் கைகோர்க்க வேண்டும். நான் சனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டால் நாட்டினது உட்கட்டமைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

# ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைகள் நிறுத்தம்

(கொழும்பு)

கோட்டே சிறி ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலையில் நடைபெறவிருந்த அனைத்து இருதய சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு மருந்து மற்றும் சத்திர சிகிச்சைக்கான பொருட்களை வழங்கியதற்கான பணக்கொடுப்பனவைச் செலுத்தாததால், அந்தப்பொருள் விநியோகத்தினை நிறுத்துவதற்கு விநியோகஸ்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதனால் இருதய சத்திர சிகிச்சைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் தற்போது இருதய சத்திர சிகிச்சைக்காக ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் அவர்கள் இதுவரை செலவு செய்த பணமும் வீணாகியுள்ளது. தேவையான மருந்துகளையும் சத்திர சிகிச்சைக்கான பொருட்களையும் எடுத்து வரும் நோயாளர்களுக்கு மட்டும் சத்திர சிகிச்சை செய்வதற்கு வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும் சில பொருட்களின் விலை மிக அதிகமாகவுள்ளதால் நோயாளர்களினால் அந்தச் செலவுகளைச் சமாளிக்க முடியாதுள்ளது.

ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் நாளொன்றிற்கு மூன்று சத்திர சிகிச்சைகள் அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 2007 ஆம் ஆண்டு வரை சத்திர சிகிச்சைக்கான பட்டியல் உள்ளது. சிறி ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்கான மருந்து மற்றும் சத்திர சிகிச்சைப் பொருள் விநியோகத்திற்கென சுமார் 44 மில்லியன் ரூபாவை விநியோகஸ்தர்களுககு செலுத்த வேண்டி இருப்பதாக வைத்தியசாலை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சார்க் மாநாட்டில் சந்திரிகா குமாரதுங்க

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் 12,13 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள தெற்காசிய கூட்டமைப்பான சார்க் மாநாட்டில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதி பொறுப்புடன் ஆசிய அளவிலான மாநாட்டில் சந்திரிகா குமாரதுங்க பங்கேற்கவுள்ள கடைசி மாநாடு இதுவாகும்.

சந்திரிகா குமாரதுங்கவுடன் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, வெளிவிவகார அமைச்சு செயலாளர் எச்.எம்.ஜி.எஸ் பாலிஹக்கர ஆகியோரும் டாக்காவில் நடைபெறும் சார்க் அமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் செயலர்களின் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த ஆண்டு சனவரி மாதம் சார்க் மாநாடு நடைபெற இருந்தது. ஆழிப்பேரலை தாக்கத்தால் ஆசிய நாடுகள் பேரழிவைச் சந்தித்ததால் இம் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. தற்போது பாகிஸ்தான் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள போதும் அனைத்து சார்க் அமைப்பு நாடுகளின் தலைவர்களும் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக பங்களாதேஷ் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே நவம்பர் 25 முதல் 27 ஆம் திகதி வரை மலட்டாவில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் கூட்டத்துக்குச்செல்லும் சிறிலங்கா குழுவானது சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் முடிவு செய்யப்படும் என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

# தேர்தல் வன்முறைகளைப் பகிரங்கப்படுத்த கண்காணிப்பாளர் வலியுறுத்தல்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் வன்முறைகள் தொடர்பான விபரங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார். தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் இயக்குனர் பி.எம் திசாநாயக்க இது தொடர்பில் கூறியுள்ளதாவது:-

தேர்தல் வன்முறைகளை அறிந்து கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு. வன்முறை தொடர்பான விபரங்களை மறைப்பது என்பது தேர்தலில் மக்கள் வாக்களிப்பது தொடர்பான முடிவைத் தடுக்கக்கூடும். எந்தக்கட்சியை ஆதரிப்பது என்று இந்த வன்முறை தொடர்பான தகவல்கள் ஊடாக வாக்காளர் முடிவு செய்ய முடியும். பொலிஸ்துறையினரது இந்த முடிவு மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகும் எனத் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக போலியாக முறைப்பாடு செய்யப்படுவதாகவும் இந்த வன்முறைகள் மூலம் மக்கள் வாக்களிக்கச் செல்வது தடைப்படக்கூடும் என்றும் அண்மையில் பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட கல்குடா கல்விவலயத்தில் இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காத பட்டதாரி பயிலுநர்களில் 51 பேர் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாக நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

இதற்கான கடிதங்கள் இன்று முற்பகல் 10 மணிக்கு கல்குடா வலய கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கல்குடா வலய கல்விப்பணிப்பாளர் யு. எல். எம் ஜெய்னுதீன் தெரிவித்தார்.(32)

# ரணில் மீதான விசாரணை இல்லை; மகிந்த மீதான விசாரணை தொடருமாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை லஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு நிராகரித்துள்ளது. அதேவேளை ராஜபக்ஷ மீதான அம்பாந்தோட்டை ஆழிப்பேரலை நிவாரண நிதிமோசடி தொடர்பான விசாரணைகள் தொடரும் என அறிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் கணினி கொள்வனவில் ஊழல் நடைபெற்றதாக ஆணைக்குழுவிடம் துறைமுக அமைச்சர் மங்கள சமரவீரமுறைப்பாடு செய்திருந்தார். இம்முறைப்பாடு தொடர்பாக கடந்த வாரம் ஆணைக்குழு ஆராய்ந்தது.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவர் அமீர் இஸ்மாயில் கூறியுள்ளதாவது, மங்கள சமரவீர தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமில்லாதவை. ரணில் பிரதமராக இருந்தபோது அமைச்சரவையும் திறைசேரியும் ஒப்புதல் அளித்த பின்னர் தான் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையில் அது தொடர்பாக மேலதிக விசாரணைகள் தேவையில்லை. முறைப்பாடு செய்துள்ள மங்கள சமரவீரவுக்கு இன்று எமது பதில்அனுப்பி வைக்கப்படும்.

அதேநேரத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது அம்பாந்தோட்ட ஆழிப்பேரலை நிவாரண நிதிமோசடி மீதான விசாரணைகள் தொடரும். இது தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சியைச்சேர்ந்த ரட்ணநாயக்க முறைப்பாடு செய்திருந்தார். சில நாட்களுக்கு முன்னதாக அவரது வாக்குமூலத்தை நாம் பதிவு செய்தோம். அவர் கையளித்துள்ள ஆவணங்களை ஆராய உள்ளோம் என அவர் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை நிவாரண நிதி மோசடிதொடர்பாக குற்றத்தடுப்புப் பிரிவினர்விசாரணைகளை மேற்கொள்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவை சிறிலங்கா தலைமை நீதிமன்றம் மூலம் மகிந்தராஜபக்ஷ பெற்றுள்ளார். லஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவும் தம் மீதான விசாரணைகளை நிறுத்திவைக்க வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் தலைமை நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தடை உத்தரவு எம்மைக் கட்டுப்படுத்தாது. எமது ஆணைக்குழு இந்த வழக்கின் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் அமீர் இஸ்மாயில் கூறினார்.

# யாழ்.பொதுவிளையாட்டரங்கில் விளையாட்டு நிகழ்வுக்குமட்டும்அனுமதி

## -யாழ்.மாநகர ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான பொது விளையாட்டரங்கில் எதிர்காலத்தில் விளையாட்டு நிகழ்வுகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இம் மைதானம் பல்வேறு களியாட்ட விழாக்களுக்கும் மற்றும் இராணுவத்தினரின் பல நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதன் காரணமாக இம் மைதானம் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் பயன்படுத்த முடியாதநிலைமைக்கு சென்றுள்ளது. இதனை பல விளையாட்டுக் கழகங்களும் மாநகர சபை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் விளைவாகவே இந்த அறிவுறுத்தலை யாழ்.மாநகர சபை ஆணையாளர் விடுத்துள்ளார்.

பல இலட்சம் ரூபா செலவில் இம் மைதானம் திருத்தப்பட்ட போதிலும் இதில் விளையாட்டுக்குப் புறம்பான நிகழ்வுகளும் இடம் பெற்றமையால் செலவு செய்தமைக்குக் கூடப் பயனற்ற நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே இத்தகைய முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஏனைய நிகழ்வுகள் இடம் பெறுவதன் மூலம் மைதானத்தைப் பயன்படுத்துபவர்களும் பாதிப்படைவதினாலேயே இம்முடிவு செயல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் முடிவை விளையாட்டுக் கழகங்களும் ஆதரித்துள்ளன.

# நீராடச் சென்றவர்கள் சடலங்களாக மீட்பு

பொத்துவில் அருகம்பே கடலில் நீராடச் சென்ற போது காணாமல் போன இரண்டு இளைஞர்கள் நேற்றுக் காலை சடலங்களாக மீட்கப்பட்டனர். இவர்கள் பண்டாரவளை மற்றும் வெள்ளவாயப் பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் நேற்று மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. (32)

# புதிய நடைமுறை

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியிடப்படும் போது முதன் முறையாக புதிய முறை ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பிரதி தேர்தல் ஆணையாளர் ரசிக பீரிஸ் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் சனாதிபதித் தேர்தலில் தொகுதி முறையிலான வாக்குகள் அறிவிக்கப்படும் போது வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் விகிதங்களும் அறிவிக்கப்படவுள்ளன.கொழும்பு பல்கலைக்கழக கணினிமய பிரிவின் ஆதரவுடன் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக ரசிக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (32)

# பாடசாலைகளுக்கு தேர்தல் விடுமுறை

சனாதிபதித். தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அரசாங்கப் பாடசாலைகள் மூடப்படவுள்ளன. சனாதிபதித் தேர்தலுக்கான பணிகளின் நிமித்தமே இவை மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோரிக்கை ஒன்றை ஏற்கனவே தேர்தல் ஆணையாளர் கல்வி அமைச்சிடம் முன்வைத்திருந்தார். (32)

# சரத் அமுனுகமவின் நிலைப்பாடு என்ன? ரணில் விக்கிரமசிங்க கேள்வி

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்பாட்டை முன்னெடுப்பது தொடர்பாகவும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் நிதி அமைச்சர் சரத் அமுனுகம தமது நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.கண்டி கலகெதரையில் நேற்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, ஏற்கனவே கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில் சனாதிபதியும் அமைச்சர் சரத்அமுனுகமவும் போர் நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச்செல்வதாக உறுதியளித்திருந்ததாக சுட்டிக் காட்டினார்.அத்துடன் அதன் வழியில் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்திருந்தனர்.

எனினும் மகிந்தவின் கொள்கைப் பிரகடனத்தின் 28 ஆவது பக்கத்தில் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக விரோதமான கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் சரத் அமுனுகம போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாகவும் சமாதான முன்னெடுப்புக்கள்குறித்தும் தமது தற்போதைய நிலைப்பாட்டை பாராளுமன்றத்தில் வெளியிடவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார். (32)

# ரணிலுடன் தொலைக்காட்சி விவாதத்துக்கு மகிந்த ராஜபக்ஷ தயாராம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கவுடனான தொலைக்காட்சி விவாதத்துக்குத் தாம்தயார் என்று சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

புளத் சிங்களவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ பேசியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எம்மைத் தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு ரணில் விக்கிரம சிங்க சவால் விடுத்துள்ளார். அவரது சவாலை நாம் ஏற்கிறோம். அவரை எதிர்கொள்ள நாம் தயார். நாம் அந்த விவாதத்தில் கலந்து கொண்டால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளுடனான தமது ஒப்பந்தத்தை பகிரங்கப் படுத்த ரணில் ஒப்புக்கொண்டுள்ளார்.

ரணில் எந்த இடத்தில் நேரடி விவாதத்துக்கு அழைக்கிறாரோ அங்கு நாம் பங்கேற்கத் தயார். டெடிகம, காலி, கோட்டை அல்லது பட்டலந்த எங்கு ரணில் அழைத்தாலும் நாம் பங்கேற்கத்தயார். நாம் அஞ்சவில்லை.குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் உருவாக்கப்பட்ட அந்த ரகசிய ஒப்பந்தத்தை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக நாம் அந்த விவாதத்துக்கு தயாராக இருக்கிறோம் என்றார் மகிந்த ராஜபக்ஷ.

# தமிழ்மொழி அமுலாக்கத்திற்குசனாதிபதி தேர்தலில் கவனம் செலுத்தப்படவில்லை

## –அகில இலங்கை இந்துவாலியர் சங்கம் அதிருப்தி

(கொழும்பு)

தமிழ் மொழி அமுலாக்கத்திற்கு எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் கவனம் செலுத்தப்படாமை குறித்து அகில இலங்கை இந்து வாலிபர் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் இனமுரண்பாடுகளுக்கு வித்திட்டது தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படாமையாகும்.இது இன்று ஆயுதப்போராட்டம் வரையில் விரிவடைந்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் மொழியின் உரிய அமுலாக்கத்திற்கு சனாதிபதி வேட்பாளர்களோ அல்லது அவர்களுக்கு ஆதரவளிக்கும் தமிழ் கட்சிகளோ உரிய கவனம் செலுத்தவில்லை என அகில இலங்கை இந்து வாலிபர் சங்க பொதுச்செயலர் தமனோகரன் குற்றம் சுமத்தியுள்ளார். (32)

# தேர்தல் வன்முறை தொடர்பாக இதுவரை 160 பேர் கைது

கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை தேர்தல் தொடர்பானபல வன்செயல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் செயலகபிரதிப் பொலிஸ்மா அதிகாரி காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறிய குற்றங்களுக்காக 160 பேர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை, அவர்களில் சிலர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளனர். மேலும் பலர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

## திருமலையில்...

உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் திருகோணமலை பிரதேச செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர் உறுதியளித்தார். (25)

## சனாதிபதி...

குறித்து அறிந்து கொள்வதில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் அதிக அக்கறை காட்டியுள்ளனர்.

தேர்தல் சம்பந்தமான தமது விஜயத்தை முடித்துக் கொண்டு உடனாயாகவே இவர்கள் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (33)

## சனாதிபதியாக...

மண்போட்டனர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் புத்தர் சிலைகளையும் எமது தாயக மண்ணில் நிறுவி தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்தனர். உயிரோடு தமிழ்இளைஞர்களை ரயர்போட்டு துடிக்கத் துடிக்க சாகடித்தனர் மாணவர்களின் கல்விக்கு ஆப்பு வைத்தனர். தமிழ்சகோதரிகளைபாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கி கொலை செய்தனர்.

பாடசாலை, மசவழிபாட்டுத்தலம், வீடுகள் எல்லாவற்றிக்கும் எறிகணைத்தாக்குதல்கள் மற்றும் விமானத்தாக்குதல்களை நடத்தி அழித்தனர். தமிழினம் வந்தேறு குடிகள் கள்ளத்தோணிகள் என்று எம்மை இம்சைப்படுத்தினர். சுனாமியின் பின்னர் ஒரு பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டுமெனச் சர்வதேசம் அழுத்தம் கொடுத்தபோதும் அதனை வளங்க விடாமல் தடுத்தனர். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வளங்க விடாமல் தடுத்தனர். தமிழினத்திற்கு எந்தவொரு நியாயமான தீர்வும் கிடைக்கக்கூடாது என்பதில் அனைத்து அரசியல் தலைவர்களுமே உறுதியாக செயற்பட்டனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிகளான இவர்கள் ஆணை பெண்களாகவும் பெண்ணை ஆணாகவும் மட்டுமே மாற்ற முடியாது. மற்றைய அனைத்தையும் செய்ய முடியுமென இறுமாப்புடன் கூறிய இவர்கள் இனவாதத்துடன் இரண்டறக்கலந்தவர்கள். இதுதான் சிறிலங்கா சனாதிபதிகளது வரலாறு. இதைத் தமிழினம் ஒருநாளும் மறக்காது. இப்போது மகிந்தவின் சிந்தனையோ ரணிலின் சித்தாந்தமோ எமக்கு உரிமையைத் தரப்போவதில்லை. இவர்களின் நடிப்பும் வாக்குறுதிகளும் தமிழர்களிடம் இனியும் எடுபடாது யார்சனாதிபதியானாலும் முகம் மட்டுமே வேறு அகம் ஒன்று. உருவம் தான் வேறு உள்ளம் ஒன்று தான். பார்வைகள் தான்வேறு பழக்க தோசம் ஒன்றுதான் என மட்டக்களப்பு அம்பாறை தமிழ் தேசிய ஒற்றுமை ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலில்...

அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றன. இத்தகைய பிரசுரங்கள் குறித்து யாழ். மாவட்ட மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினராகிய நாம் கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில்...

இதனை அடுத்து மாலை 6.20 மணியளவில் களுவங்கேணிப் பகுதி ஊடாக உந்துருளி ஒன்றில் பயணித்த எஸ்.லீபீன்(வயது-31) என்ற இளைஞர் வழிமறிக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளார்.

இரவு 7.45 மணியளவில் ஏறாவூர் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்து சிறீலங்கா படைப் புலனாய்வு பிரிவினர் எஸ் உதயன் (வயது-25) என்ற இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.